பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 தை 27 திங்கட்கிழமை (09.02.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:075

பொதுசன நூலகம் மாநகர சபை யாழ்ப்பாணம்

# இலங்கை விவகாரம் ஐ.நாவுக்கு செல்லாது தடுப்பதில் அரசு மும்முரம்

## பல நாடுகளுடன் அவசர அவசர ஆலோசனை

கொழும்பு, பெப்ரவரி 09

**இலங்கை விவகாரத்தை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபைக்கு கொண்டு செல்லாது தடுப்பதற்கான நடவடிக்கைகளில் இலங்கை அரசு மும்முரமாக இறங்கியிருக்கின்றது.**

**அதற்காக பல்வேறு நாடுகளுடன் இலங்கை அரசுத் தரப்பினர் அவசர அவசரமாக கலந்தாலோசனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.**

ஐ.நா.பாதுகாப்புச் சபையின் தற்காலிக உறுப்புரிமையைக் கொண்டுள்ள மெக்சிக்கோ இலங்கை நிலைவரம் குறித்து பாதுகாப்புச் சபையின் கவனத்துக்கு கொண்டுவருவதற்கான யோசனையை முன்வைத்துள்ளது.

பாதுகாப்புச் சபை உறுப்பு நாடுகளின் பிரத்தியேக சந்திப்பின் போதே மெக்சிக்கோ இந்த யோசனையை முன்வைத்துள்ளது.

எனினும் பாதுகாப்புச் சபையின் நிகழ்ச்சி நிரலில் இந்த விடயம் இடம்பெறாததை சுட்டிக்காட்டியுள்ள ரஷ்யா இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. (02 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களின் நிலை குறித்து இந்தியா மீண்டும் கவலை!

கொழும்பு, பெப்.9

வன்னியில் இராணுவ மோதலில் சிக்கியுள்ள 2 லட்சம் தமிழ் மக்களின் பாதுகாப்பு குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் மீண்டும் ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை காங்கிரஸ் உறுப்பினர்கள் மாநாட்டில் உரையாற்றுகையில் பிரணாப் முகர்ஜி இதனைத் தெரிவித்துள்ளார். இந்த மாநாட்டின் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி உட்பட உயர் தலைவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

''இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதலில் 2 லட்சம் பொதுமக்கள் சிக்கியுள்ளனர். இலங்கை அரசை அந்த மக்களுக்குப் பாதுகாப்பு, உணவு மற்றும் தங்குமிடங்களை வழங்குமாறு நான் மீண்டும் வேண்டுகோள் (16 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் நேற்றும் ஷெல் வீச்சு; 72 பொதுமக்கள் பலி; 198 பேர் காயம்

கொழும்பு, பெப்.9

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சுதந்திரபுரம் பகுதியில் நேற்றும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற் றுள்ளன. இதில் 72 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 198 பேர் காயமடைந்துள்ளனர், தாக்குதல் நடைபெற்ற பகுதி கண்கொண்டு பார்க்க முடியாத அளவுக்கு பெரும் அவலம் மிகுந்ததாக இருக்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.



சுதந்திரபுரம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து கொண்டிருந்த மக்கள் மீது ஞாயிறன்று காலை 10 மணியில் இருந்து பிற்பகல் 3 மணி வரை கடும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என இணையத்தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இணையத்தளத்தில் வெளியிட்ட ஏனைய விவரங்கள் வருமாறு:

இரண்டு மைல் நீளமான தூரத்துக்கு - மிகச் செறிவாக - பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருந்த (16 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைக்கடலில் டோரா மூழ்கடிக்கப்பட்டதாகத் தகவல்

கொழும்பு, பெப்.9

முல்லைத்தீவில் இருந்து 52 கடல்மைல் தொலைவில் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் கடும் சமர் ஒன்று இடம்பெற்றுள்ளது. இந்தத் தாக்குதலில் கடற்படையின் சூப்பர் டோரா மூழ்கடிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் ஒரு சூப்பர் டோரா கடுமையான சேதங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது என்று சில இணையத்தளங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. இந்த மோதல் தொடர்பாக அந்த இணையத்தளங்கள் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

முல்லைத்தீவில் இருந்து 52 கடல்மைல் தொலைவில் (16 ஆம் பக்கம் பார்க்க)

## டோரா தாக்கப்படவில்லை புலிகளின் படகுகளே அழிக்கப்பட்டன – கடற்படைப் பேச்சாளர் அறிவிப்பு

கொழும்பு, பெப். 09

முல்லைத்தீவு கடற்பரப்பில் பயணித்துக்கொண்டிருந்த கடற்படையினரின் டோராப் படகுகள் மீது கடற்புலிகள் எவ்வித தாக்குதலையும் நடத்தவில்லை. மாறாக, புலிகளின் படகுகள்மீது கடற்படையினர் தாக்குதலை நடத்தி ஆறு புலிகள் இயக்க உறுப்பினர்களைக் கொன்றதுடன், புலிகளின் இரண்டு படகுகளையும் அழித்துள்ளனர். கடற்படையினருக்கு எவ்வித சேதங்களும் ஏற்படவில்லை.

- இவ்வாறு கடற்படையின் பேச்சாளர் டீ.கே.பீ. தசநாயக்க தெரிவித்தார்.

கடற்புலிகள் நடத்திய வலிந்த தாக்குதலில் கடற்படைக்குச் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழர் அவலத்தை தடுக்கக்கோரி மலேசியாவிலும் இளைஞர் தீக்குளிப்பு

சிரம்பான், பெப். 09

இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற வலியுறுத்தி மலேசியாவில் ஈழத் தமிழர் ஒருவர் தீக்குளித்து உயிரிழந்தார்.

இலங்கையில் போர் நிறுத்தம் செய்யக்கோரி உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் இந்தக் கோரிக்கையை (02 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் விமானங்கள் உருத்தெரியாதவாறு தனித்தனிப் பாகங்களாக கழற்றப்பட்டுள்ளன

### இராணுவப் பேச்சாளர் தகவல்



கொழும்பு, பெப். 9

விடுதலைப்புலிகள் வசம் இருந்த விமானங்கள் உருத்தெரியாதவாறு தனித்தனியாக வெவ்வேறு பாகங்களாகக் கழற்றி வைக்கப்பட்டுள்ளன என்று கருதப்படுகின்றது. அவற்றை தேடும் பணியில் படையினர் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார அரச ஊடகம் ஒன்றுக்கு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் போரை நிறுத்தக்கோரி இரண்டாவது நாளாக தி.மு.க. பேரணி

சென்னை, பெப். 09

இலங்கையில் போரை நிறுத்த வலியுறுத்தி தி.மு.க. தலைமையிலான இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவை சார்பில் தமிழக உள்ளாட்சித்துறை அமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் நேற்று இரண்டாவது நாளாக சென்னையில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற பிரமாண்டமான பேரணி நடைபெற்றது.

இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுகின்றமையைத் தடுத்து நிறுத்த வலியுறுத்தி தி.மு.க. தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர் நல உரிமை பேரவையின் சார்பில் தமிழகம் முழுவதும் பேரணிகளும், ஆர்ப்பாட்டங்களும், பொதுக்கூட்டங்களும் நடத்துவதற்கு (02 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கான உணவு விநியோகம் இடைநிறுத்தம்; ஐ.நா., அரச தரப்புக்கள் கருத்து முரண்பாடு

கொழும்பு, பெப். 09

வன்னியில் மோதலில் சிக்கியுள்ள மக்களுக்கான உணவு விநியோகத்தை மேற்கொள்வதற்குத் தேவையான பாதுகாப்புத் தொடர்பாக அரசுக்கும் ஐக்கிய நாடுகளுக்கும் இடையில் கருத்து முரண்பாடு உருவாகியுள்ளது.

அதன் காரணமாக வன்னியில் ஏற்கனவே பாரிய உணவு நெருக்கடியை எதிர்கொண்டுள்ள பல்லாயிரக்கணக்கான மக்களுக்குரிய உணவு விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

உணவு விநியோகத்தை மேற்கொள்வதற்கான பாதுகாப்பான இடமொன்றைத் (02 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் இருந்து வருவோரின் மீள்குடியமர்வு; வவுனியாவில் பஸில் தலைமையில் மாநாடு

வவுனியா, பெப்.9

ஒருவார காலத்துக்குள் ஒருலட்சம் மக்கள் வன்னியில் இருந்து வவுனியாவுக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக மீள் குடியமர்வு, அனர்த்த் நிவாரண அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவர்களை மீள் குடியமர்த்துவது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்து ஆராய விசேட மாநாடு கடந்த வெள்ளிக்கிழமை வவுனியாவில் இடம்பெற்றது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷ தலைமையிலான விசேட குழு இந்த மாநாட்டில் கலந்து கொண்டது.

ஆயிரத்து 800 ஏக்கர் காணியில் தற்காலிக குடிசைகளை அமைத்து இவர்களை குடியமர்த்துவது என அந்த மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

நேற்றுமுன்தினம் வவுனியாவுக்கு வந்து சேர்ந்த 5,100 பேரையும் தங்கவைக்க விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் வரத் தொடங்கியிருப்பதையடுத்து நெளுக்குளம் பாடசாலையும், பம்பைமடு பகுதியில் மன்னார் வீதியோரத்தில் அமைக்கப்பட்டுள்ள யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர் விடுதியிலும் இப்போது இடம்பெயர்ந்த மக்கள் தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றார்கள்.

எனினும் வன்னியில் இருந்து இவ்வாறு இடம்பெயர்ந்து வருபவர்கள் தொடர்பான விவரங்களை, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள அவர்களின் உறவினர்கள் அறிந்து கொள்ள முடியாதுள்ளதாக பலரும் தெரிவிக்கின்றார்கள். (1-7)

# வன்னியிலிருந்து அரசகட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வரும் மக்களின் நலனில் அதிக அக்கறை தேவை

## அரசிடம் வலியுறுத்துகிறார் அமைச்சர்-டக்ளஸ்

யாழ்ப்பாணம், பெப்.09

விடுதலைப்புலிகளின் கடும் அச்சுறுத்தலுக்கும் மத்தியில் அரச கட்டுப்பாட்டுக்குள் வரும் எமது உறவுகளின் நலன்கள் குறித்து அதிக அக்கறை காட்ட வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு.

இவ்வாறு தெரிவித்தார் சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சரும் வடமாகாணத்தின் விசேட செயலணித் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா.

நேற்று முன்தினம் யாழ்.அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் கூறியதாவது:

இன்று வன்னி மண்ணில் புலித்தலைமையின் பலாத்காரப்பிடிக்குள் சிறைபட்டு, பல்வேறு துயரங்களை அனுபவித்து வரும் எமது உறவுகள் புலித்தலைமையிடம் இருந்து மீட்சி பெறும் நாளே எமக்கு மகிழ்ச்சி தரும் நாளாகும்.

நாம் ஒருபோதும் அழிவு யுத்தத்தை விரும்பவில்லை. முடிவற்ற யுத்தம் எமது மக்களுக்கு அழிவுகளை மட்டுமே கொடுத்துக்கொண்டிருக்கிறது. புலித்தலைமை செய்துவரும் மாபெரும் வரலாற்று தவறுக்காக எமது அப்பாவி தமிழ்மக்கள் எந்த வகையிலும் தண் டனைகளை அனுபவிக்கக் கூடாது. இது குறித்து நான் ஜனாதிபதியிடம் விளக்கிக் கூறிவருகிறேன்.

இன்றைய வன்னி மக்களின் அவலங்களுக்கு புலித்தலைமையும், புலித்தலைமைக்கு ஆதரவாக செயற்பட்டு, முண்டு கொடுத்துவரும் மக்கள் நலன் கருதாத ஒரு சில அரசியல் கட்சிகளுமே காரணம்.

புலித்தலைமையின் கடும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வரும் எமது உறவுகளின் நலன்கள் குறித்து அதிக அக்கறை செலுத்த வேண்டிய பாரிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு- என்றார். (அ)

# டிராக்டரில் நெல் மூடைகளுக்கு மேல் அமர்ந்து சென்றவர் வழியில் தவறி வீழ்ந்து மரணம்

கெருடாவில், பெப்.09

நெல் மூடைகளை ஏற்றிவந்த டிராக்டரில் இருந்து தவறி வீழ்ந்து குடும்பஸ்தர் ஒருவர் மரணமானார். அவர் மீது நெல் மூடைகள் விழுந்ததாகவும் அதனாலேயே மரணம் ஏற்பட்டதாகவும் சொல்லப்படுகின்றது.

உடுப்பிட்டியைச் சேர்ந்த வெங்கடாசலம் இரத்தினகுமார் என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு பரிதாபமாக உயிர்நீத்தார்.

வயலில் அறுவடை செய்து டிராக்டரில் நெல் மூடைகளை அடுக்கி அவற்றின் மீது அவர் அமர்ந்து சென்றார் என்றும்-

வழியில் மூடைகளில் இருந்து தவறிக் கீழே விழுந்த போது நெல்மூடைகள் அவர் மீது சேர்ந்து விழுந்தன என்றும் கூறப்படுகின்றது.

நெல்மூடைக்குள் சிக்குண்டு மயக்கமடைந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் வழியில் அவர் மரணமானார். (அ-1-153)

# இலங்கையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிடப்பட்டுள்ளது.

சனிக்கிழமையன்று முதல் நாளாக, பிரஸ்தாப நல உரிமை பேரவை சார்பில் சென்னையில்பேரணியும், பொதுக்கூட்டமும் நடைபெற்றது. இதில் நிதியமைச்சர் அன்பழகன், காங்கிரஸ் தலைவர் கே.வீ.தங்கபாலு உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்றனர். அதன் தொடர்ச்சியாக 2ஆவது நாளாக நேற்று நல உரிமைப் பேரவை சென்னையில் பிரமாண்ட பேரணி நடத்தியது.

தென்சென்னை தி.மு.க. சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பேரணியில் தி.மு.க., காங்கிரஸ், இந்திய யூனியன், முஸ்லீம் லீக், தமிழ் மாநில தேசிய லீக், ஜனநாயக முன்னேற்றக் கழகம், புரட்சி பாரதம் ஆகிய கட்சிகளும் மற்றும் திராவிடர் கழகத்தின் நிர்வாகிகளும், தொண்டர்களும் பெரும் திரளாகக் கலந்துகொண்டனர்.

சென்னை மன்றோ சிலையிலிருந்து தொடங்கிய பேரணி சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை வரை நடைபெற்றது. உள்ளாட்சித்துறை அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற இந்தப் பேரணியில் தி.மு.கவின் முதன்மைச் செயலாளரும், மின்துறை அமைச்சருமான ஆற்காடு வீராசாமி, சட்டமன்ற காங்கிரஸ் தலைவர் சுதர்சனம், முன்னாள் மேயர் கராத்தே தியாகராஜன், முன்னாள் அமைச்சர் ரகுமான்கான், சென்னை மேயர் மா.சுப்பிரமணியன், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஜே.எம்.ஆரூண் எம்.பி, தி.மு.கவின் தலைமை நிலையச் செயலாளரும், முன்னாள் மேயருமான சா.கணேசன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் காதர் மொய்தீன் எம்.பி, தென்சென்னை மாவட்ட தி.மு.க. செயலாளர் ஜெ.அன்பழகன், சேப்பாக்கம் பகுதி தி.மு.க. செயலாளர் மோகன் பாபு உள்ளிட்ட தி.மு.க. மற்றும் அதன் தோழமை கட்சிகளைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான நிர்வாகிகளும், தொண்டர்களும் கலந்துகொண்டனர்.

பேரணியில் பங்கேற்றோர் தத்தம் கட்சிகளின் கொடிகளை ஏந்திவந்து முழக்கங்களை எழுப்பியவாறு சென்றனர். 'அழிக்காதே, அழிக்காதே தமிழ் இனத்தை அழிக்காதே', 'நிறுத்து, நிறுத்து, உடனே போரை நிறுத்து', 'தாழாது, தாழாது, தமிழ் இனம் தாழாது', 'யாரையும் தாழ்த்தாது', 'தடுப்போம், தடுப்போம், இனப் படுகொலையை தடுப்போம்' ஆகிய முழக்கங்களை அவர்கள் எழுப்பினார்கள். காலை 10 மணிக்கு தொடங்கிய பேரணி 11.30 மணிக்கு சேப்பாக்கம் விருந்தினர் மாளிகையை வந்தடைந்தது.

பேரணியின் முடிவில்அமைச்சர்ஸ்டாலின் அங்கு உரையாற்றினார்.(அ-சி)

# வன்னிக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிப்பதற்கு ஐக்கியநாடுகள் சபை தவறியுள்ளதால் அரசு வன்னிக்கான உணவு விநியோகத் தொடரணிகளை இடைநிறுத்தத் தீர்மானித்துள்ளது என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ்.பி. திவாரத்ன தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் உள்ள குழப்பகரமான நிலை காரணமாகவும் உணவு விநியோகத்தை மேற்கொள்வதற்கான பாதுகாப்பான இடத்தை ஐக்கிய நாடுகள் குறிப்பிடாதமையாலும் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

''பாதுகாப்புப் படையினரும், விடுதலைப் புலிகளும் தற்போது மிகவும் நெருக்கமாகக் கடும் மோதலில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில் மனிதாபிமானத் தொடரணிகள் அந்த இடத்திற்கு எவ்வாறு செல்லமுடியுமென்பது எமக்குத் தெரியவில்லை'' எனத் திவாரட்ண மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்புக் குறித்த எந்த உத்தரவாதமுமில்லை. இதனால் நிலைமை சீராகும் வரை உணவு விநியோகத் தொடரணியை இடைநிறுத்தத் தீர்மானித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

உணவுப் பொருள்கள் தவறான நபர்களின் கைகளில் விழும் அபாயம் உள்ளது எனவும் திவாரட்ண குறிப்பிட்டார்.

வன்னியிலுள்ள ஐக்கிய நாடுகளினதும், செஞ்சிலுவைக் குழுவினதும் அதிகாரிகளினாலேயே உணவை விநியோகிப்பதற்குப் பாதுகாப்பான இடம் எது என்பதை த் தெரிவிக்க முடியும்.

இதேவேளை, வன்னிக்கு மேலும் உணவைக் கொண்டுசெல்வது குறித்து அரசுடன் தாம் தொடர்ந்தும் பேச்சுகளை மேற்கொண்டுள்ளார் என உலக உணவுத்திட்டத்தின் அதிகாரி அஜெப் அஸ்ரே தெரிவித்துள்ளார்.

வன்னி மக்களுக்கு உணவு விநியோகத்தை மேற்கொள்வதற்கு தமக்கு வெறுமனே நான்கு மணித்தியால அவகாசம் மாத்திரமே தேவைப்படும் எனவும் அவர் கூறினார்.

உணவு விநியோகத்தைப் பாதுகாப்பாக மேற்கொள்வதற்கான இடமொன்றைத் தெரிவிக்குமாறு முல்லைத்தீவு அரச அதிபரை தாம் வலியுறுத்தியுள்ளார் எனவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.(அ-சி)

# இரவு வேளையில் மூதாட்டி கழுத்து நெரித்துக் கொலை

யாழ்ப்பாணம், பெப்.09

இருபாலைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் வயோதிபப் பெண் ஒருவர் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் இருபாலை, பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த குணரத்தினக் குருக்கள் இராசம்மா (வயது-94) என்பவரே மரணமானவராவார்.

அவரது வளர்ப்புமகன் பிரஸ்தாப மூதாட்டியிடம் பணம் கேட்டதாகவும் அவர் மறுத்ததை அடுத்தே தாக்குண்டதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டது. கோப்பாய் பொலிஸாரால் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. (அ-1-78)

# ஈழத்தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தி, தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த முத்துக்குமார், பள்ளப்பட்டிரவி, சீர்காழி ரவிச்சந்திரன் ஆகியோர் தீக்குளித்து உயிரிழந்தனர்.

இதேபோல மலேசியாவில் வசித்து வந்த இலங்கைத் தமிழரான ராஜா என்ற 27 வயது இளைஞர் தீக்குளித்து உயிரிழந்திருக்கிறார்.

ரஹாங்கோட்டை ஆலான்தம்பிச்சாலை முனீஸ்வரர் ஆலயத்துக்கு எதிரே கார்கள் விற்பனை செய்யும் கடைக்கு முன்னதாக தனது உடலில் பெற்றோல் ஊற்றித் தீவைத்துக் கொண்டு உயிருக்குப் போராடி இருக்கிறார்.

அப்போது எதிரே கடையில் இருந்த ஒருவர் தனது காரில் வைத்திருந்த தண்ணீர் போத்தலை எடுத்துவந்து பற்றி எரிந்த ராஜாவின் உடல்மீது ஊற்றித் தீயை அணைக்க முயன்றுள்ளார். ஆனால் அந்த முயற்சி பலன் அளிக்காமல் உடல் கருகி ராஜா இறந்திருக்கிறார்.

ராஜாவின் உடலுக்கு அருகே ஒரு பெரிய டயறி, பணப்பை, தீப்பெட்டி, மேலும் ஒரு பை ஆகியவற்றை பொலிஸார் மீட்டனர். கருகிய நிலையில் உயிரிழந்த ராஜாவின் உடலை சிரம்பான் துவாங்கு ஜபார் வைத்தியசாலைக்கு பொலிஸார் அனுப்பி வைத்தனர்.

பொலிஸார் மீட்ட அவரது டயறியில், நீண்டகடிதம் ஒன்றை அவர் எழுதி வைத்திருக்கிறார். இலங்கையில் பிறந்த நான் பிழைப்புத் தேடி மலேசியா வந்தேன். இங்கு எனக்கு நல்லவேலை கிடைத்தது. காலையில் கார் கழுவும் வேலையும், மாலையில் சீன ஹோட்டல் ஒன்றிலும் வேலைசெய்து வந்தேன். இதன் மூலம் 1200 வெள்ளி (மலேசிய நாணயம்) வருமானம் கிடைத்து வருகிறது.

**ஒபாமா இலங்கை சென்று போர்நிறுத்தத்தை வலியுறுத்த வேண்டும்**

இலங்கையில் நிரந்தரப் போர்நிறுத்தம், உடனடி பேச்சு ஆகியவற்றை வலியுறுத்தி நான் தீக்குளிக்கிறேன். அப்பாவித் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ஒபாமா உடனடியாக இலங்கை சென்று போர்நிறுத்தத்தை வலியுறுத்த வேண்டும். அவருடன் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், தமிழக முதல்வர் கருணாநிதி, நோர்வே சமாதான தூதர், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ ஆகியோரும் செல்லவேண்டும்.

இந்த டயறியை வைகோவிடம் கொடுக்கவும். எனது கோரிக்கைகளை எல்லாம் வைகோ நிறைவேற்ற வேண்டும் என்று அந்த டயரியில் எழுதியிருந்தார்.

முன்னர், ராஜா இரவு நேரத்தில் கோட்டை முனீஸ்வரர் ஆலயத்துக்கு வந்து இலங்கை அரசால் தமிழர்கள் கொன்று குவிக்கப்படுவதை சோகமான குரலில் கூறிக் கவலைபடுவாராம். இதை அந்தப் பகுதியில் உள்ள மக்கள் கூறி, அவருக்காக அனுதாபப்பட்டனர். (அ-சி)


திருமண வாழ்த்து

திநேஸ் - நவதர்ஜினி



இன்று திருமண பந்தத்தில் இணையும் சுடர் ஒளி ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த திரு. தர்மலிங்கம் தினேஸ் - நவதர்ஜினி தம்பதியினரை, பல்லாண்டுகாலம் பதினாறும் பெற்று, பெருவாழ்வு வாழ்கவென உளமார வாழ்த்துகின்றோம்.

சுபம்

சுடர் ஒளி, உதயன் பணியாளர்கள்.


# இலங்கை விவகாரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மெக்சிக்கோ மறுபடி இலங்கை விவகாரம் குறித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் கவனத்தை ஈர்க்கும் முயற்சியை இவ்வாரம் மேற்கொள்ளலாம் என ஐ. நா.வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில் இலங்கை விவகாரத்தை ஐ.நா.பாதுகாப்புச் சபைக்குக் கொண்டு வருவதற்கு மெக்சிக்கோ உட்பட ஏனைய சில நாடுகள் எடுக்கும் முயற்சிகளைத் தடுப்பதற்காக இலங்கை அரசு அந்த நாடுகளுடன் பேச்சு நடத்தி வருகின்றது என்று மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கை விவகாரத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபைக்குக் கொண்டு செல்ல மெக்சிக்கோ நடவடிக்கை எடுக்கும் என்று நாம் நம்பவில்லை.

அச்சபையில் உள்ள 5 நிரந்தர உறுப்பு நாடுகளில் ஒன்றாவது எதிர்ப்புத் தெரிவித்தால் அச்சபைக்குக் கொண்டுவரப்படும் எந்தவொரு விவகாரமும் பின்வாங்கப்பட்டுவிடும்.

எமது நாட்டு விவகாரத்தைப் பாதுகாப்புச் சபைக்குக் கொண்டுவர மெக்சிக்கோ முயற்சி செய்கிறது என்று கூறப்படு கின்றபோதிலும் மெக்சிக்கோ அப்படியானதொரு முயற்சியில் இறங்காது என்று நாம் நம்புகிறோம்.

இருப்பினும், நாம் எமது நாட்டு நிலைமை தொடர்பாக மெக்ஷிக்கோவிற்கு விளக்கி வருகிறோம். எமது தூதர்கள் தற்போது மெக்சிக்கோ அரசுடன் பேச்சு நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

இதேவேளை, வாஷிங்டனில் உள்ள எமது தூதுவரும் அங்குள்ள அதிகாரிகளைச் சந்தித்து இலங்கை விவகாரம் பற்றிப் பேசிவருகின்றார்.

இப் பேச்சுகள் அனைத்தும் நிச்சயம் வெற்றி பெறும் என்று நாம் நம்புகிறோம். எமது நாட்டு செயற்பாடுகளை அந்நாடுகள் நிச்சயம் விளங்கிக்கொள்ளும் - என்றார். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இன அழிப்புக் குற்றச்சாட்டு அமெ.நீதிமன்ற விசாரணைக்கு!

இலங்கை அரசின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத் தளபதி லெப்டினன்ட் கேணல் சரத் பொன்சேகா ஆகிய இருவருக்கும் எதிராக அமெரிக்க நீதிமன்றத்தில் இன அழிப்புக் குற்றச்சாட்டுகள் சுமத்தப் பட்டிருக்கின்றன.

அமெரிக்காவின் முன்னாள் பிரதி உதவி சட்டமா அதிபர் புரூஸ் பெயின், இன அழிப்புக்குப் பொறுப்புக் கூறும் அமெரிக்காவின் சட்டத்தின் கீழ் இந்த இருவருக்கும் எதிராக இந்தக் குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்திருக்கின்றார்.

சட்டத்துக்குப் புறம்பான மூவாயிரத்து எழுநூறு கொலைகளையும்,18 ஆயிரம் பேர் காயமுறுதலையும், 13 லட்சம் மக்களின் கட்டாய இடம் பெயர்தலையும் செய்ய வைத்துக் குற்றமிழைத்தனர் என்பது உட்படப் பன்னி ரண்டு குற்றச்சாட்டுகள் அடங்கிய பத்திரம் அமெரிக்க சட்டமா அதிபரிடமும், நீதி அமைச்சிடமும் கையளிக்கப் பட்டுள்ளன.

இன்றைய நிலையில் இவை குற்றப்பத்திரங்கள் தாம். அமெரிக்க நீதித்துறை இவ்விடயத்தை ஒட்டிக் காத்திர மான நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்தால்தான் இந்த எத்தனத்துக்குள் புதைந்து கிடக்கும் சட்ட விஸ்வரூபத்தின் உண்மை வடிவம் தெரியவரும். அதுவரை இவை வெறும் பத்தி ரங்கள்தாம்.

தென்னிலங்கையில் இன்று ஒருபுறம் ஏக யுத்த வெற்றிக் கும்மாளம். மறுபுறம் அச்சுறுத்தலில் அடங்கிப் போய்க் கிடக்கும் ஊடகத்துறை.

இவற்றின் காரணமாக, அமெரிக்காவில் தாக்கல் செய்யப் பட்டுள்ள இந்தக் குற்றப் பத்திரங்கள் பற்றிய செய்திக்கு தென்னிலங்கை ஊடகங்களில் அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லைப் போலும்.

யுத்த வெ(ற்)றிக்குள்ளும் ஊடக அழுத்தத்துக்கும் மத்தியிலும் இச்செய்தி அமுங்கி, நசுங்கிப் போய் விட்டது போன்று தோன்றுகின்றது.

ஆனால் அமெரிக்க சட்ட நடவடிக்கைச் செயன் முறைக்குள் இத்தகைய விடயங்கள் அமுங்கி, நசுங்கிப் போகும் என்று நம்புவதற்கில்லை.

இனவழிப்புக்குப் பொறுப்புக் கூறும் அமெரிக்கச் சட்டத் தின் கீழான முதல் - பரீட்சார்த்த - வழக்கு முயற்சி இது. உலகளாவிய ரீதியில் இனி வரப்போகும் பல்வேறு சட்ட முயற்சிகளுக்கான முன் உதாரணமாகவும், வழிகாட்டியாக வும் கூட இந்த விவகாரம் அமையக்கூடும் என்பதால் இத னைக் கையாள்வதில் அமெரிக்க சட்டத்துறை அதிக நிதான மும், சிரத்தையும், கவனமும் எடுக்கும் என்பது உறுதி.

இனவழிப்புச் செயற்பாடுகளுக்கு எதிரான அமெரிக் கச் சட்டங்களை அமிலப் பரிசோதனைக்கு உட்படுத்தும் விவகாரமாகவும் இது மாறியிருப்பது கவனிக்கத்தக்கது.

இலங்கையில் இடம்பெறும் இராணுவ வன்முறை களுக்கும் தவறுகளுக்கும் சட்டவிரோத செயற்பாடுகளுக் கும் பதவி நிலை ஒழுங்கின்படி பொறுப்பேற்க வேண்டிய நிலையிலேயே இராணுவத் தளபதியும் அவருக்கு மேல் பாதுகாப்புச் செயலாளரும் உள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

அதேசமயம், இருவரும் அமெரிக்க சட்டக்கட்டுப்பாடு களுக்கு உட்படும் விதத்தினாலான பிரஜாவுரிமை நிலைமை பெற்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்கப் பிரஜா வுரிமை பெற்றவர். இராணுவத் தளபதி லெப்டினன்ட ஜெனரல் சரத் பொன்சேகா அமெரிக்காவில் நிரந்தரமாக வசிப்பதற்கான 'கிறீன் கார்ட்' அனுமதி பெற்றவர்.

எனவே, இவர்களுக்கு எதிரான வழக்குகள் அமெரிக் காவில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றமை அவர்களுக் குத் தலையிடி தரக்கூடியதே.

இக்குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதில் மனுதாரர் தரப்பு வெற்றிபெறுமா என்பது வேறு விடயம். ஆனால் அவற்றை நீதிமன்றத்தில் எதிர்கொள்வதற்காக பாதுகாப் புச் செயலாளரும், இராணுவத் தளபதியும் அதிக சிரத்தை யும், கவனமும் எடுக்க வேண்டியிருக்கும்.

இலங்கையில் நடப்பதை வெறும் 'பயங்கரவாதப் புலி களுக்கு' எதிரான யுத்தம் என்று காட்டுவதன் மூலம் இந்த வழக்கின் எதிரிகள் இருவரும் மேற்படி பாரதூரமான குற்றச் சாட்டுகளில் இருந்து இலகுவில் தம்மைத் தவிர்த்துக் கொண்டுவிட முடியாது.

இலங்கையில் நடைபெறும் யுத்தத்தில் சிவிலியன் உயிரிழப்புகள் மிக மோசமாக இடம்பெறுகின்றன. நேரடி யாக யுத்தம் புரியும் இருதரப்புகளுக்கும் - அரசுப் படை களுக்கும் புலிகளுக்கும் - அப்பால், இந்த யுத்தத்தின் நடு வில் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்படுபவர்களும், படுகாயங்களுக்கு உட்படுத்தப்படுபவர்களும், உடைமை மற்றும் சொத்து அழிவுகள், இழப்புகளுக்கு உள்ளாகு பவர்களும், அகதிகளாக இடம்பெயர்ந்து அவலப்படும் நிலைக் குத் தள்ளப்படுபவர்களும் பெரும்பாலும் தமிழர்கள் தாம்.

ஆகவே, இந்த அடிப்படையில் இலங்கையில் இடம் பெறுவதை ஓர் இனவழிப்பு இலக்கு என அர்த்தப்படுத்த முடியுமா என்பதை அமெரிக்க நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டியிருக்கும்.

இந்த யுத்தம் 'பயங்கரவாதப் புலிகளுக்கு' எதிரானது என்பதை அமெரிக்கா ஏற்றுக்கொண்டாலும், அதை முன் னெடுப்பதில் நேரடியான பாதிப்புக்கு உள்ளாவது தமிழி னம் என்ற காரணத்தினால், சிவிலியன்களுக்குப் பேரழி வும், நாசமும் விளைவிக்கத்தக்க வகையில் பொறுப்பற்ற முறையில் - அசிரத்தையுடன் - அல்லது இனவாதத் திமிருடன் - அது முன்னெடுக்கப்படுகின்றதா என்பதையும் அமெரிக்க நீதிமன்றம் கவனத்தில் எடுக்கக்கூடும்.

இலங்கைப் பாதுகாப்புத் தரப்பின் இரு உயர் அதிகாரி களுக்கு எதிரான குற்றப்பத்திரம் இது என்றாலும் கூட, தமிழர்களுக்கு எதிராகக் கொடூர யுத்தத்தைத் தொடுத் திருக்கும் இலங்கை அரச உயர் பீடத்துக்கு எதிரான குற் றப்பத்திரம் இது என்று இதனை அர்த்தப்படுத்துவதிலும் தவறில்லை.





வன்னியில் போரில் சிக்கியுள்ள மக்களின் அவலங்களுக்குத் தீர்வு கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கும் வகையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் பாப்பரசரின் இலங்கைத் தூதுவர் மேதகு மரிய செனாரீ ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. பாப்பரசரின் பிரதிநிதியை யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந் தரநாயகம் ஆண்டகை தலைமையிலான குருக்கள் ஆலயத்துக்கு அழைத்துச் செல்வதையும் கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப் படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஷ்மன்)

# போரை நிறுத்து என்று இலங்கையிடம் சொல்வதற்கு இந்திய அரசாங்கத்துக்கு முதுகெலும்பு இல்லை

## தமிழக மக்கள் மன்னிக்க மாட்டார்கள் என்கிறார் ரவிசங்கர் குருஜி

ஈழத் தமிழருக்கு ஆதரவு தரமாட் டோம் என்று சிலர் இங்கே இறுக்க மாக வாயை மூடிக் கொண்டிருக்கும் நிலையில், ஈழத்தமிழர்களுக்கு ஆதர வுக் குரல் கொடுத்திருக்கிறார், பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி. இலங்கைக்கு அமைதித் தூதராகச் சென்று போரை நிறுத்தவும் தயார் என்று அறிவித்தி ருக்கிறார் அவர்.

கடந்த 27ஆம் திகதி ராமேஸ்வரம் அகதிகள் முகாமிற்குச் சென்று அங் குள்ள இலங்கைத் தமிழர்களைச் சந் தித்தார் ரவிசங்கர் குருஜி. ராமேஸ்வரம் அகதிகள் முகாமுக்குள் அடியெடுத்து வைத்த முதல் ஆன்மீகவாதி அவர்தான். அதற்கு மறுநாள் சென்னையில் உலக அமைதிக்காக 'இசையும் தியானமும்' என்ற தலைப்பில் அருளாசி வழங்கிப் பேசியபோது அதில் ஆன்மீகத்தை விட அவர் ஈழப் பிரச்சினையைப் பற்றிப் பேசியதே அதிகம். இது தொடர்பாக ரவி சங்கர் குருஜியை சந்திக்க முயன்றோம்.

### ராமேஸ்வரம் சென்று ஈழத்தமிழ் அகதிகளைச் சந்தித்த ரவிசங்கர் சுவாமிகள் குமுதத்துக்கு அளித்த பேட்டி

பகிரதப் பிரயத்தனத்திறகுப் பிறகு திரு வான்மியூர் கடற்கரைச் சாலையிலுள்ள ஒரு பண்ணை வீட்டில் அவரை நாம் சந்தித்தோம். அதிகாலை முதலே காத் திருந்த பக்தர்களுக்கு தரிசனம் வழங்கி விட்டு அதன் பின்பே நம்மிடம் பேசி னார் அவர்.

ராமேஸ்வரம் அகதிகள் முகாமில் இலங்கை அதிகதிகளிடம் நாம் பேசிய போது, அங்குள்ள பெண்களும், வய தானவர்களும் தாங்கள் அனுபவித்த துன்பத்தை என்னிடம் பகிர்ந்து கொண் டார்கள். அதைக் கேட்டு என் நெஞ்சம் கனத்துப் போனது. நான் மூன்றாண்டுகளுக்கு முன் கொழும்பு சென்றிருந்த போது, அங்கே ஆன் மீகக் கூட்டங்களின் மூலம் புலிகளுக்கு அறிவுரை சொல்லியிருந்தேன். பல முள்ள போதே பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணுங்கள். எல்லாப் பலத்தை யும் இழந்த பிறகு எந்தப் பலனும் இருக்காது. எனவே பேச்சுவார்த்தை யைத் தொடங்குங்கள் என்று பலமுறை சொன்னேன். எந்தப்போரை யும் யுக்தியால்தான் வெல்ல முடியும். இதற்கு மகாபாரதப் போரே உதார ணம் என்று குறிப்பிடுகின்றார் அவர்.

ஈழப் பிரச்சினையில் இங்குள்ள நமது அரசியல்வாதிகளின் செயற் பாட்டில் இலங்கைத் தமிழர்களுக்கு நம்பிக்கை இல்லை. இலங்கைக்கு குருஜி வந்தால் மக்களுக்கு நம் பிக்கை கிடைக்கும் என்று அங் குள்ள பல தரப்பினரும் நம்புகிறார் கள். எனவே விரைவில் நான் இலங் கைக்கு அமைதித் தூதுவராக செல்ல இருக்கிறேன் என்றார் குருஜி.

அவரிடம் நாம் சில கேள்விகளை முன் வைத்தோம்.

**தூதுவராகச் செல்ல யாராவது பரிந் துரைக்க வேண்டுமா? யாருடைய அனும திக்காகக் காத்திருக்கிறீர்கள்?**

யாரிடம் அனுமதி கேட்க வேண்டும்?

'ஒரு வீடு தீப்பற்றி எரியும்போது, என் வீட்டை அணைக்க வாருங் கள்' என்று யாராவது அழைப்பார் களா? சுனாமி, வெள்ளப்பாதிப்பு ஏற்பட்ட போது யாரைக் கேட்டு உதவிக ளைச் செய்தோம்? அங்கே ஓர் இனம் அழிந்து வருகிறது. அதைத் தடுக்க முயற்சிக்கிறேன். எங்கே துயரம் நடந் தாலும் அந்தத் துயரத்தைத் துடைப் பது மனிதனின் கடமை.

**நீங்கள் தூது வராகச் செல் வதை இலங்கை அரசு ஏற்குமா? ஏற்றுக்கொள் ளும் என்று எதை வைத்து நம்பு கிறீர்கள்?**

அமைதிக் கான ஒரு முயற் சியை நாம் மேற்கொள் ளும் போதே இப்படியொரு சந்தேகம் நமக்கு ஏன் வர வேண் ம்? முயற்சித் தால் முடியா தது எதுவு மில்லை. தற் போது அரசியல்



வாதிகளை விட ஆன்மீக வாதிகளைத் தான் மக்கள் அதிகம் நம்புகின்றார்கள், காரணம் அரசியல்வாதிகள் சுயநலவா திகள். ஆன்மீகவாதிகள் மக்களின் நலனை மட்டும் பார்ப்பவர்கள். எங்களி டம் பரந்த மனப்பான்மை உள்ளது.

நான் அமைதித் தூதுவராக இலங் கைக்குச் சென்றால் அதிகாரத்தால் ஒரு நாளும் அமைதியைக் கொண்டு வரமுடியாது என்பதை இலங்கை அரசுக்கும், புலிகளுக்கும் உணர்த்து வேன். இலங்கை ஒரு புத்த மத நாடு. அங்குள்ள ஒருசில ரைத் தவிர, வேறு யாரும் போரை விரும் பவில்லை. நான் இலங்கை சென்று அங்குள்ள புத்த பிக் குகள், இலங்கை அதிபர் ராஜபக்ஷ மற் றும் முக்கிய அரசியல்வாதிகளைச் சந் தித்து இதை உணர வைப்பேன்.

**இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்க சரி யான கொள்கைகள் நமது நாட்டில் இல்லை என்று கூறியிருக்கிறீர்கள். எதை வைத்து அப்படிச் சொல்லியிருக்கிறீர்கள்?**

போரை நிறுத்து என்று சொல்வ தற்கே இந்திய அரசுக்கு முதுகெலும்பு இல்லை. இலங்கைக்கு இந்தியா இராணுவ உதவி, ஆயுத உதவிகளைச் செய்து வரு கிறது. இதை மூடிமறைத்து மக்களை ஏமாற்ற முடியாது. இதற்காக இந்திய அரசை தமிழக மக்கள் மன்னிக்க மாட் டார்கள்.

**அப்படியென்றால் ஈழத்தமிழர்களின் துயர் துடைக்க இந்திய அரசு என்னதான் செய்ய வேண்டும்?**

உடனடியாக போரை நிறுத்தி, அங் குள்ள தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும். பேச்சுவார்த்தை மூலம் நல்ல தீர்வுகாண இந்திய அரசு முன் வர வேண்டும். *(நன்றி: குமுதம்)*

# சீமா நிறுவனத்தின் பயிற்சியும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம், பெப்.9

சீமா (CIMA) நிறுவனம் தனது யாழ் விரிவுரையாளர்களுக்கான பயிற்சி களை நாளை செவ்வாய்க்கிழமையும் மறுதினம் புதன்கிழமையும் யாழ். பொது நூலக மண்டபத்தில் நடத்த வுள்ளது.

அதே வேளை-

சீமா நிறுவனத்தில் பயிற்சி பெற வுள்ள மாணவர்கள், நிறுவனத்தின் யாழ்.நிலையத்தில் கற்பிக்க உள்ள விரிவுரையாளர்களையும் கொழும் பில் இருந்து வருகை தந்துள்ள விரி வுரையாளர்களையும் செவ்வாய்க் கிழமை இரண்டு மணி தொடக்கம் ஆறு மணிவரை நாவலர் மண்டபத் தில் சந்தித்துக் கலந்துரையாடலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(அ)

## நாளை

| | |
|---|---|
| தை 28 | 10.02.2009 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | பிரதமை |
| | மு.இ. 07.33 வரை |
| நட்சத்திரம்: | மகம் |
| | பி.இ. 01.21 வரை |
| சுபநேரம்: | 11.04 - 12.34 |
| ராகுகாலம்: | 03.34 - 05.04 |

# புலிகள் கடலுக்குள் பாய்ந்தும் தப்பமுடியாது; வேண்டுமானால் கடல்நீரேரிக்குள் குதிக்கலாம்

## குருநாகல் தேர்தல் கூட்டத்தில் ஜனாதிபதி

கொழும்பு, பெப்.9

விடுதலைப் புலிகள் படகுகள் மூலம் கடல் வழியாக தப்பமுடியாத வாறு கடலில் பாதுகாப்பு பலப்படுத் தப்பட்டுள்ளது. அவர்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த கடற் பகுதி முழுவதும் இப்போது எங்கள் படையி னரின் வசம் வந்துவிட்டது. ஆகையால் அவர்கள் கடல்வழியா கத் தப்பமுடியாது. எனவே அவர்கள் கடலுக்குள் பாய்ந்துகொள்ள முடியாது. வேண்டுமானால் கடல் நீரேரிக்குள் மட்டுமே குதிக்கலாம்.

குருநாகலில் நடைபெற்ற தேர் தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகை யில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார்.

பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டும் கடைசி இலக்கை எட்டும் வரை இரா ணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட மாட்டா-

ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு நிபந்தனைகள் ஏதுமின்றி அரசிடம் சரணடைய வேண்டும் என விடுதலைப் புலிகளிடம் மீண்டும் கேட்டுக்கொள் கின்றேன்-

வன்னி மோதலில் சிக்கியுள்ள மக் களை நிபந்தனை ஏதுமின்றி அரச கட்டுப் பாட்டுப் பகுதிக்குச் செல்ல புலிகள் அனுமதிக்க வேண்டும் - என்றும் ஜனா திபதி கூறினார்.

(அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடம்பெயர்ந்தோருக்கான நிவாரண விநியோகம்

குடாநாட்டில் உள்ளூரில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்கான உலருணவு நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் வழங்கற்கட்டளைகளைப் பெற்று எதிர்வரும் வியாழக்கிழமை விநியோகத்தை ஆரம்பிக்குமாறு யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் அறிவித்துள்ளார். (202)

## பொருளாளர் பதவி நீக்கம்

தியாக சோமஸ்கந்தராஜக் குருக்கள், லட்சுமணன் தோட்டம், பருத்தித்துறை அவர்கள் பேரவையின் யாப்பின் 3ஆம் பிரிவின் 3ஆம், 4ஆம் உப பிரிவின் பிரகாரமும் 9ஆம் பிரிவின் 2ஆம் உப பிரிவின் பிரகாரமும் பொதுச்சபை, நிர்வாக சபை கூட்டங்களுக்கு சமுகம் தராமையாலும் பேரவையின் பொருளாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். எனவே பேரவை சம்பந்தமான நிதி விடயமாக அவருடன் தொடர்புகொள்ள வேண்டாம் என அங்கத்தவர்களுக்கும் மற்றையோருக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு.க.சோமசுந்தரக்குருக்கள்,
செயலாளர்
அனைத்துலக சைவக்குருமார்
அர்ச்சகர் பேரவை.

09.02.2009 முதல் மீண்டு புதுப்பொலிவுடன்
ம.ம.வி. வீதி, நெல்லியடியில்

**கஜமுகன் மெடி கெயர்**

விசேட வைத்திய நிபுணர் சேவை, OPD சேவை, பார்மசி, ஆய்வுகூட வசதி மற்றும் E.C.G., நவீன ஸ்கானிங் வசதிகளுடன் தன்நிகரற்ற வைத்திய சேவையில்.
முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளலாம்

ம.ம.வி.வீதி, (மருதம் கொமினிகேசன் முன்பாக)
நெல்லியடி,
கரவெட்டி.
தொலைபேசி
021 226 3899

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகாதேவி ராதாகிருஸ்ணன்



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கு, பழனி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாதேவி ராதாகிருஸ்ணன் 06.02.2009 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரம்பிள்ளை - பரமேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் (செட்டியார்) - நாகலட்சுமி தம்பதியினரின் மருமகளும் ராதாகிருஸ்ணனின் (டோகா) அன்பு மனைவியும் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மாணவிகளாகிய ரா.பவித்திரா (3E), ரா.லக்ஷி (1E) ஆகியோரின் தாயாரும் வசந்தநாதன் (கொழும்பு), இந்திரா, சாரதா, இன்பநாயகி, தேவகி (சுவிஸ்), மதிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பத்மநாதன், காலஞ்சென்ற செல்வநாயகி மற்றும் இந்திரா - மகாலிங்கம் (ஜேர்மனி), சிவலோகநாதன் - நித்தியலட்சுமி, சற்குணநாயகி, ராஜகோபால் - மேனகா, புனிதா - இந்திரன் (சுவிஸ்), விஜயலட்சுமி (கொழும்பு), சச்சிதானந்தசிவம், புலேந்திரன் ஐயர், லோகேஸ்வரன் ஐயர், இராசமுத்து, ரவீந்திரராஜாக் குருக்கள் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ரட்ணசிங்கம் - லலிதா, காலஞ்சென்ற சீவரட்ணம் - பரமேஸ்வரி ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2009) திங்கட்கிழமை ந.ப. 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில், கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழனி கோவிலடி, இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
தகவல்:
ராதாகிருஸ்ணன் (கணவர்).

### கந்தையா துரைசிங்கம்



பன்னாலையைப் பிறப்பிடமாகவும் கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் முகாந்திரம் ஒழுங்கை, மல்லாகத்தை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா துரைசிங்கம் நேற்று (08.02.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா -பார்வதி தம்பதியரின் ஏக புதல்வனும் நாகமணி - லட்சுமி தம்பதிய ரின் அன்பு மருமகனும் மல்லிகாதேவியின் பாசமிகு கணவரும் தனுஷா, விஜிதா, ஜெயராம், ரகுராம், பிரதீஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜ்குமாரின் அன்பு மாமனும் சிந்தாமணி, மனோன்மணி ஆகியோரின் அன்புத் தம்பியும் கனகம்மா, அமரர் சோமசுந்தரம், இரத்தினசிங்கம், சிவசுப்பிரமணியம், அமரர் சிவஅருள்நாதன், தவமணிதேவி, ஈஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.02.2009) ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம், கொத்தியாலடி இந்து மாயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகாந்திரம் ஒழுங்கை,
மல்லாகம்.
தகவல்:
குடும்பத்தினர்.

## தையல் பயிற்சி நிலையம் திறப்பு

வடமராட்சி, பெப்.9

வடமராட்சி செவிப்புலனற்றோர் சங்கத்தின் தையல் பயிற்சி நிலையத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் உள்ள சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலர்களான இ.வரதீஸ்வரன், எஸ்.சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொண்டு பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்துவைத்து பயிற்சி நிலையத்தையும் திறந்து வைப்பார்கள்.

இத் தையல் பயிற்சி நிலையத்திற்குத் தேவையான 4 தையல் மெசின்களை பருத்தித்துறை பிரதேச செயலரும் தளபாடங்களை கரவெட்டி பிரதேச செயலரும் சமூகசேவைத் திணைக்களத்திலிருந்து பெற்று வழங்கியுள்ளனர். (1-236)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

வடமராட்சி, பெப்.9

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தில், வடமராட்சி கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடத்தப்பட்ட மனைமுகாமைத்துவ கற்கைநெறியின் சான்றிதழ் வழங்கலும், கண்காட்சியும் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் அ.சா.அரியகுமார் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்வில் பிரதமவிருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசாவும், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை திருச்சபை முகாமைசேகரக் குரு அருட்திரு.ந.அருள்நாதன், வடமராட்சி வலய முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.தபேந்திரராஜா ஆகியோரும் கலந்து கொள்வார்கள். (1-236)

**Fridge விற்பனைக்குண்டு**

I) Bottle Cooler
SANDEN INTER COOL MODEL
Double Slide door
II) Bottle Cooler Single door
இரண்டும் உடன் விற்பனைக்குண்டு
உடன்தொடர்பு கொள்ளவும்.
போன்:- 0778607753

**சாரதி தேவை**

நாள் வியாபாரம் செய்ய அனுபவம் வாய்ந்த 50 வயதிற்கு மேற்பட்ட வான் சாரதி தேவை.
உடன் தொடர்பு கொள்ளவும்.
போன். 0778607753

## தவறிவிட்டது

கைதடி கிழக்கு, கைதடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் கந்தசாமி என்பவரது தே.அ.அட்டை (620743070V), வி.அ.அட்டை (091020804) என்பன நேற்று (08.02.2009) ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலிச் சந்தையில் தவறிவிட்டன.

கண்டெடுத்தவர்கள் திருநெல்வேலிச் சந்தியிலுள்ள கனகா பத்திரிகை விற்பனை நிலையத்தில் அல்லது கைதடி ஆரியபவான் தேநீர்ச்சாலையில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## தவறிவிட்டது

1½ பவுண் கைச்செயின் ஒன்று ஆனைக்கோட்டைக்கும் தெல்லிப்பழைக்கும் இடையில் (இணுவில் பரராஜ சேகரப்பிள்ளையார் கோயில் கல்யாண மண்டபம் உட்பட) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

சிவம் நிஷாந்தன்
பழைய பொலிஸ் நிலைய வீதி, உயரப்புலம், ஆனைக்கோட்டை.
T.P.060 221 6579/0771387545

## நீர்வேலி வடக்கு அருள்மிகு நாகபூஷணி அம்மன் ஆலய மகாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்



நிகழும் சர்வதாரி வருஷம் தைத்திங்கள் 27ஆம் நாள் திங்கட்கிழமை (09.02.2009) மு.ப. 9.30 மணி தொடக்கம் 10.30 மணி வரையுள்ள சுப நேரத்தில் ஸ்ரீ நாகபூஷணி அம்மனுக்கு மகாகும்பாபிஷேகம் செய்ய திருவருள் கூடியிருப்பதால் அன்பர்கள், அடியார்கள் அம்பாளின் திருவருள் பெற்று உய்வீர்களாக.

இவ்வண்ணம்
அம்பாள் அடியார்கள்.

## தவறிவிட்டது

அந்தோணிப்பிள்ளை மேரி ஜோசேப் ஆகிய எனது (450052965V) இலக்கம் கொண்ட சில்லாலை, பண்டத்தரிப்பு எனும் முகவரியுடைய தேசிய அடையாள அட்டையும் கரவெட்டி பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய போது பருத்தித்துறை இராணுவ அதிகாரியினால் வழங்கப்பட்ட இராணுவ அடையாள அட்டையும், நீலநிறமான செபமாலை ஒன்றும் மந்திகை ஆஸ்பத்திரி வீதி இராணுவ சோதனைச் சாவடிக்கும் வல்லிபுரக்கோவில் வீதியிலுள்ள புலோலி சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் திரு.யோகநாதன் அவர்களது வீட்டிற்கும் இடையில் என்னால் இழக்கப்பட்டுள்ளது இவற்றை யாராவது கண்டெடுப்பின் குறித்த அதிபரிடம் அல்லது நெல்லியடி நெல்லை சில்க் ஸ்தாபனத்திலோ கையளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஏ.எம்.ஜோசேப், இமையாணன், உடுப்பிட்டி.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 08 |  | 22 |
| ★ | | ★ |
| 06 | | 01 |
| ★ | | ★ |
| 1931 | | 2008 |

### அமரர் சின்னையா இராசதுரை

காற்றோடு நீங்கள் கலந்து இன்றோடு ஓராண்டு
இன்றுவரை தேம்புகிறோம் இன்னும் நாம்
ஆறவில்லை
வாழும்வரை உங்களது நினைவுகளால்
வாடிடுவோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

நாவற்காடு,
அச்சுவேலி.
பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சிவசுப்பிரமணியம் தங்கம்மா


கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் தங்கம்மா நேற்று (08.02.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரநாதர் சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் திருமதி சிவசுப்பிரமணியம் விக்கினேஸ்வரி (ஆசிரியை, கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்), சிவசுப்பிரமணியம் சிவலிங்கநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் செல்லையா சிவசுப்பிரமணியம் (கிராம அலுவலர், J/313, J/321), திருமதி சி.சகாரா ஆகியோரின் அன்பு மாமியும் திருமதி சி.கண்மணியின் அன்புச் சகோதரியும் சிவசண்முகநாதனின் மைத்துனியும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்கள் செந்தில்குமரன் , திருக்குமரன், இளங்குமரன், சிவறூபனா , கஜானன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வடிவேற்கரசி, வடிவேற்கரசன், ஞானவேல்கரசன் ஆகியோரின் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.02.2009) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3 மணிக்கு கைதடி ஊரியான் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி மேற்கு,
கைதடி.
தகவல்:
செ.சிவசுப்பிரமணியம் (G.S மருமகன்),
சி.விக்கினேஸ்வரி (ஆசிரியை, மகள்)

## ஆறாம் ஆண்டு நினைவுகளில்



### அமரர் தம்பு சிவபாக்கியன்


திதி: பூரணை (09.02.2009)

மண்ணில்: 12.01.1922
மனதில்: 18.01.2003

பாசமுடன் பக்குவமாய் எமை வளர்த்து
கட்டுப்பாட்டுடன் கண்ணியமும்
கற்றுத்தந்து
கடைசிவரை கண் போல் காத்த எங்கள் ஐயா
எமை விட்டு எங்கு சென்றீர்கள்
காலமெல்லாம் எங்கள் நினைவில்
வாழ்வீர்கள் ஐயா!

198, செப்.பெடிக் ரோட்,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வித்தியாசமானதொரு சூழலில் வித்தியாசமான யுத்தத்தில் ஈடுபட்டவர்

## அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 32 ஆவது நினைவுதினம் இன்று

இன்று தமிழ்த் தேசிய இனம் சொல்லொணா எதிர்பாராத துயரங்களுக்குள்ளும் நெருக்கடிகளுக்குள்ளும் வாழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் அமரர் ஜீ.ஜீ. அவர்களின் திறமையையும் வல்லமையையும் அவரது 32 ஆவது நினைவு தினத்தில் நன்றிக்கடனாக எடுத்துரைப்பது எமது கடமையாகும்.

கணபதிப்பிள்ளை காங்கேசர் பொன்னம்பலம் வித்தியாசமான ஒரு யுகத்திற்கும் வித்தியாசமான ஒரு சூழலுக்கும் உரியவர். நாவன்மையாலும் தன்னம்பிக்கையாலும் ஆளுகை செய்யப்பட்ட மங்கிச் செல்லும் பாராளுமன்றக் கடையெல்லையின் கடைசி வாய்ப்புத் தூண் அவராவார். கடுமையான சொற்றொடரையும் இதமாகத் தரவல்ல செழுமையான அவர் குரலொலியை இனியும் ஒரு தடவை நாம் கேட்கமாட்டோம், அதிர்ஷ்டம் இல்லாத அவரது எதிரியை இரகசியமாகப் பின்தொடர்ந்து செல்லும் கற்றாந்த அவரின் இடிபோன்ற குரல், தாக்குதலிலிருந்து இலகுவாகத் தப்பித்துக் கொள்ளும் சொற்றிறன், விவாதத்தில் போட்டியென்று வந்துவிட்டால் அவர் கொடுக்கும் நெத்தியடி, பாராளுமன்ற வாசலுக்குள்ளும் அதுபோல் நீதி மன்றங்களின் சுவர்களுக்குள்ளும் பயத்தை விரட்டி யடிக்கவல்ல ஏளன வார்த்தை ஜாலம்... இவற்றையும் நாம் இனிப்பார்க்கப் போவதில்லை. சோல்பெரி ஆணைக் குழுவை மந்திரத்தால் கட்டுண்ட நாகத்தின் நிலைக்குத்தள்ளி, அவர் உரையை மீண்டும் ஆற்ற அவர்களைக் கோர வைத்த அவர் பேச்சாற்றலின் வெற்றி கரமான காலத்தைப் பற்றியும் நாம் கேட்கப் போவதில்லை. ஐ.நா.சபையின் மதிப்பிற்குரிய அரங்கத்தினரை 1965 இல் வியப்பிலாழ்த்தி அவர் பேச்சுக்களின் வீச்சுக்கள்...

### நீண்ட காலம் மக்கள் ஆதரவு பெற்றவர்

இவ்வாறு அமரர் ஜீ.ஜீ.பொன்னம் பலத்தின் ஆற்றலைப் புகழ்ந்துள்ளார்கள் அமெரிக்கத் தமிழ்ச்சங்கத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் சச்சி ஸ்ரீகாந்தாவும் சிவாசச்சியும்.

1931இல் இலங்கைத் தீவில் அனைவருக்குமான வாக்குரிமை நிறுவப் பட்டதையடுத்து, ஈழத்துத்தமிழர்கள் மத்தியில் அவர்தம் சிந்தை கவர்ந்த முதல் அரசியல்வாதியாக பொன்னம்பலம் மாறினார். ஆகவே, 1931இற்கும் 1970 இற்குமிடையில் வரும் நான்கு தசாப்த காலத்திலான அவரது தேர்தல் பதிவுகள் மீளாய்வு செய்யப்படுவதற்கான தகுதி யைப் பெறுகின்றன. இன்றுள்ள நிலவரப்படி, கட்சிச் சார்புகளைக் காட்டாமல் மிக நீண்டதொரு காலத்திற்கு வாக்காளப் பெருமக்களை அடிக்கடி சந்தித்து வந்தவரென்று தமிழ் அரசியல் வாதிகளுள் எவருமிலர்.

தமிழ் மக்களுக்கு பொன்னம்பலம் புரிந்த பொதுச்சேவையை நான்கு கட்டங்களாக வகுக்கலாம். 1-பருத்தித்துறை உறுப்பினராக (1931-1943) இக்கால கட்டத்தில் இலங்கை அரச பேரவைக்கான மூன்று தேர்தல்களை பொன்னம்பலம் எதிர்கொண்டார். 1931 இல் தனது முதல் முயற்சியில் மன்னார் முல்லைத் தீவுத் தொகுதிக்கு 1931 யூன் மாதம் தேர்தல் நடைபெற்றது. மன்னார், முல்லைத்தீவுத் தொகுதிக்கு இடம்பெற்ற முதல் அரசபேரவை தேர்தல் அது. அத்தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகள் 10314 வாக்குகளாகும். எஸ்.எம். ஆனந்தன் - 5647 வாக்குகள், ஜீ.ஜீ. பொன்னம்பலம் 4667வாக்குகள், ஆனந்தன் பெற்ற மேலதிக வாக்குகள் 980 ஆகும்.

### 31 ஆவது வயதில் பேரவை பிரவேசம்

பகிஷ்கரிப்பு விலக்கிக் கொள்ளப்பட்டதும் பருத்தித்துறைத் தொகுதிக்கான இடைத்தேர்தல் 1934 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி நடைபெற்றது. அளிக்கப்பட்ட வாக்குகளில் 82 சத வீதத்தைப் பெற்று பொன்னம்பலம் தனது 31 ஆவது வயதில் முதலாவது அரச பேரவைக்குள் பிரவேசித்தார். தேர்தல் என்பது மக்களுக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தமையால் பருத்தித் துறைத் தொகுதியின் வாக்காளர்களில் 39 சதவீனமானோரே தமது வாக்குரிமையைப் பயன்படுத்தினர்.

1976 இல் சட்டமேதையாக இறுதிச் செயற்பாடு: 1970இற்கும் 1976 இற்குமிடையே இலங்கையின் அரசியல் அரங்கில் பல்வேறு சம்பவங்கள் நிகழ்ந்தன. 1972 இல் குடியரசு அரசியலமைப்பின் அறிமுகம், அரச அடக்கு முறைக்கான எதிர்ச் செயற்பாடாக மாணவர் இயக்கம் தோன்றியமை, பாராளுமன்றத்தின் பதவிக்காலம் வழமைக்கு மாறாக மேலும் இரண்டு வருடங்களால் நீடிக்கப்பட்டமை, 1975 இல் பொன்னம்பலத்தின் அரசியல் எதிரியானதுரையப்பா படுகொலை செய்யப்பட்டமை, (வீ.என்.நவரட்ணம், கே.பி.ரட்ணம் மற்றும் கே.துரைரட்ணம்) தமிழரசுக் கட்சியின் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.அமிர்தலிங்கம், எம்.சிவசிதம்பரம் ஆகியோரும் குடியரசு தினவைபவங்களில் பொது மக்கள் கலந்து கொள்வதைத்தடை செய்யும் வகையில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்தார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் 1976 மே மாதம் 21 ஆம் திகதி யாழ். பொலிசாரால் கைது செய்யப்பட்டமை என்பன அவற்றுள் முக்கியமானவையாகும். சிவசிதம்பரத்தைத் தவிர ஏனைய நால்வர்மீதும் ஐந்து குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன. அவற்றுள் இரண்டு, அவசரகால விதிகளை மீறிநடந்தமை, அரசிற்கெதிராகச் சதி செய்தமை என விவரிக்கப்பட்டிருந்தன. அவர்களுக் கெதிராக 'ட்றையல் அற் பார்' வழக்குத் தொடுக்கப்பட்டது. பொது அரங்கில் தனது இறுதிப்பாடலைப் பாட இச்சம்பவம் அவரைக் கொண்டு வந்தது.

'ட்றையல் அற் பார்' வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் 1976 யூலை 12 ஆந்திகதி ஆரம்பமானது. 76 வயதாயிருந்த பொன்னம்பலம் அப்போது நோய்வாய்ப்பட்டிருந்தார். அவரது சக வழக்கறிஞராக விளங்கிய ஏ.எச்.சி.டி. சில்வா கியூ.சி., பொன்னம்பலம் மரணமான தன் பின்னர், 'ட்றையல் அற் பார்' வழக்கில் பிரயாசை எடுத்துக் கொள்ள வேண்டாமெனத் தான் அவருக்கு ஆலோசனை கூறியதாகச் சொன்னார்.

'கிட்டத்தட்ட இறந்துவிட்டார் என எண்ணுமளவுக்கு, சில மாதங்களுக்கு முன்புதான் கடுமையான ஒரு சுகவீனத்திற்கு அவர் ஆளாகியிருந்தார் என்ற உண்மை தொடர்பில் அவர் மீது கரிசனை கொண்டவனாய், ''ட்றையல் அற் பார்' வழக்கில் அவர் தனது விடயத்தை எடுத்து வாதிடுவதால் ஏற்படும் அழுத்தம் அவ ருக்கு ஆபத்தானதாகும் என உணர்ந்து, அவ்வழக்கில் முன்னிலை வகித்துத் துடிப்பான பாகத்தை ஆற்றாது ஆலோசனை வழங்கும் பாகத்தை மட்டும் ஏற்று, சட்டம் சம்பந்தப்பட்ட முக்கிய வினாக்களைத் தொடுத்து வாதாடுவதை வேறொரு வழக்கறிஞருக்கு விடயம் தானே என்று கூறி அவரைத் (பொன்னம்பலத்தை) தடுப்பதற்கு நான் எவ்வளவோ முயற்சி செய்தேன்' என சில்வா தெரிவித்திருந்தார்.

பலநாள்கள் நீடிக்கக் கூடிய இவ்விவாதம் அவருக்குப் பாரதூரமான அழுத்தத்தை ஏற்படுத்தும் எனவும் நான் உணர்ந்தேன். ஆனால் அவரோ தான் இவ்வழக்கை ஏற்கனவே பாரமெடுத்துவிட்டதால் அதை ஏற்று நடத்தியே ஆகவேண்டுமெனக் கூறி, அவ்வாறே செய்தார். அவருடைய சமர்ப்பணம், அநேக நாள்கள் பிடித்த அவரது முயற்சி, அவரது உடல் நலத்தை மோசமாகப் பாதித்திருக்குமென்பதில் சந்தேகமில்லை. சில மாதங்களுக்கு முன்புதான் மரணவாசல்வரை சென்றுவிட்டு வந்த ஒருவரின் அதிசயிக்கத்தக்க ஒரு செயல் நிறைவேற்றம் அது. அதுதான் கடமையின்மீது அவருக்கிருந்த பக்தி.

தமிழ் மக்களின் விவகாரத்திற்காக முன்னெடுக்கப்படும் போராட்டமொன்றில், பாராட்டுக்குரிய இறுதி வழக்கு ஒன்றில், பதிலளிக்க வேண்டு மென்று அவருக்கிருந்த விருப்பத்துடன் பிணைந் திருந்த இக் கடமை மீதான பொன்னம்பலத்தின் பக்தியானது, பிரயத்தனமின்றி வாதம் புரியுமாறு அவரது சிங்கள நண்பர்கள் சிலர் அவருக்குக் கூறிய முன் யோசனைகள் மீதும் கூட மேலாதிக்கம் செய்து விஞ்சி நின்றது. 1976 செப்ரெம்பர் 10 ஆம் திகதி அட்பார் மேல் நீதிமன்றமானது அவசரகால விதிமுறைகளின் செல்லுபடித்தன்மை குறித்துப் பிரதிவாதிகள் தரப்பு எழுப்பிய ஆட்சேபனைக்கு ஆதரவளித்ததுடன் த.வி. கூவின் செயலாளர் நாயகமான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கமும் அரசுக்கெதிராக துண்டுப் பிரசுரங்களைத் தயாரித்து விநியோகித்த குற்றச் சாட்டிலிருந்து விடுதலையானார். வழக்கின் முதலாவது எதிரியான அமிர்தலிங்கம் வழக்கின் முடிவில் விடுதலையான போது, பொன்னம்பலத்தின் ஆற்றலுக்கு மரியாதை செலுத்துகையில், பின் வருமாறு கூறினார்.

வழக்கின்போது, அவசரகாலநிலை பிரகடனம் செய்யப்பட்ட விதத்தை நாம் எதிர்க்க வேண்டும் என்பது குறித்து ஜீ.ஜீ.பொன்னம்பலம் எம்மைத் தெளிவுபடுத்தினார். சிங்களவர்களுக் கும் தமிழர்களுக்கும் எரிச்சலூட்டிய அவசரகாலநிலை வெகுவாக வெறுக்கப்பட்டது. அதன் செல்லுபடித்தன்மைக்கெதிராக நாம் வாதிட்டபோது எமது விவகாரத்திற்குச் சிங்கள மக்களின் அனுதாபத்தையும் வென்றெடுப்போம் என்ற நம்பிக்கை எமக்கிருந்தது. ஏனெனில் அவர்களுக்காகவும் நாம் போராடிக் கொண்டிருப்போம்.

வழக்கை விசாரித்த மேல் நீதிமன்ற நீதிபதி மூவரும் 67 பக்கங்களில் ஏகமனதாக வழங்கிய தீர்ப்பில் வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டிருப் போரை விசாரிப்பதில் சட்டவாட்சியைத் தம்மால் தொடர்ந்து பிரயோகிக்க முடியாதிருப்பதாகக் குறிப்பிட்டிருந்தனர். எவ்விதியின் மூலமாகக் குறித்த நீதிமன்றமானது உருவாக்கப்பட்டதோ, 1976 மே மாதம் வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டிருந்த 59 ஆம் இலக்க அவசரகால விதியானது சட்டத்தில் அங்கீகாரத்தையோ அல்லது செல்லுபடித் தன்மையையோ கொண்டிருக்க முடியாது என்றும் அதில் தெரிவித்திருந்தனர். இதுவரை காலமும் கருத்தூன்றிச் சிந்திக் கப்படாவிடினும், சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் காந்திய பாணியில் போராடிய பெருமை பொன்னம்பலத்தைச் சாரும்.

அனைவருக்குமான வாக்குரிமை நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டதையடுத்து, பொன்னம்பலம் வாக்காளர்கள் மத்தியில் பெருமளவில் கவரப்பட்ட முதலாவது தமிழ் தலைவரானார். முன்னொழுங்கமைக்கப்படாத ஒரு பரப்பில் ஒரு முன்னோடி என்றவகையில் சில சந்தர்ப்பங்களினால் அவர் சறுக்கினார் என்பதை மறுப்பதற்கில்லை. யாரேனும் ஒரு பெரிய அரசியல் தலைவரைப் போன்று (உதாரணம்: ஆபிரகாம் லிங்கன், வின்ஸ்டன் சேர்ச்சில்) பொன்னம் பலத்திற்கு ஆதரவாளர்களுமிருந்தனர், எதிராளிகளுமிருந்தனர். அரசியல் அரங்கில், லிங்கனையும் சேர்ச்சிலையும் போன்று, அவர் வெற்றியையும் சுவைத்தார். தோல்வியையும் சந்தித்தார். 1931 இற்கும் 1970இற்குமிடையில் தமிழ்வாக்காளர்கள் அவரை ஆறுதடவைகள் தெரிவு செய்து நான்குதடவைகள் நிராகரித்தனர்.

**தொகுப்பு:- கே.எம்.ரி**

***********













கொமர்ஷல் வங்கியின் யாழ்.கிளையினர் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில் வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை வங்கி மண்டபத்தில் இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வில் மாணவி ஈ.சரண்யா மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதை யும் வங்கி உத்தியோகத்தர் எஸ்.கிங்ஸ்லிதாசன் உரை நிகழ்த்துவதையும் கொமர்ஷல் வங்கி முகாமையாளர் எஸ்.ரவீந்திரா, யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஆகியோர் மாணவர்களுக்குப் பரிசில் வழங்குவதையும் மேல் வரிசையிலுள்ள படங்களில் காணலாம்.

யாழ்.வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் பு.குகதாசன் பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் கீழ்வரிசையில் உள்ள படங்களில் காணலாம்.

(படங்கள்: லக்ஷ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜத்தின் முகம்.... நிஜத்தின் முகம்....

## "யாழ்ப்பாணத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் அவலங்களைக் காட்டும் உண்மைச் சம்பவங்கள்"

சமூகத்தின் எதிர்பார்ப்பு எதிர்கால வளர்ச்சி யைக் கருத்திற்கொண்டு பெண்பங்களிப்பின் இயக்கநிலையை அடிப்படையாகக் கொண்டன. ஆயினும் சமூகம் பெண்களுக்கு விதித்துள்ள கட்டுப்பாடுகளை உடைத்தெறியும் துணிச்சல் இன்று பெண்களுக்கே ஏற்பட்டுள்ளது. மேற்குலக நாடுகளின் அதிரடி முன்னேற்றத்திற்கு அந்நாடுகளில் பெண்கள் காட்டும் துணிச்சலான செயற்பாடுகள் காரணம் எனக் கூறப்படுகின்றது. எமது நாடு இன்றும் வறுமை, பொருளாதார மந்தநிலை, அரசியல் ஸ்திரமின்மை போன்ற நிலைமைகளுக்கு, பெண்கள் தீவிரமாக தான் எழுச்சியையும், அவர்களின் தாழ்த்தப்பட்ட அந்தஸ்துமே ஒரு வகையில் காரணமாகலாம். பெண் தான் பலவகையிலும் தகுதியானவள் என்பதையும் ஆணுக்கு இசைவுபடக்கூடிய வகையில் பழைய சமூகக் கட்டமைப்புகளின் பிற்போக்குச் சிந்தனை களை உடைத்தெறியக் கூடிய சக்தி வாய்ந்தவள் என்பதையும் நிரூபிக்க வேண்டிய தேவை இன்று உள்ளது.

பெண்களின் உரிமைகளை மறுத்தல் அல்லது ஏற்றுக் கொள்ளாமை என்பது மிகவும் பிற்போக் கான சிந்தனையாகும். பெண்கள் முன்னேற்றம் அடையும் நவீன காலகட்டத்தில் சமுதாயத்தின் தேவைகளுக்கு ஏற்ப பெண்களின் உரிமை கள், பெண்களின் பங்கேற்பு என் பவற்றை ஆதாரமாகக் கொண்ட

## பாதை மாறிய பயணங்கள்

உந்துசக்தி களை வழங்க வேண்டிய தேவை சமுதாயத்தில் இருபாலாருக் கும் உண்டு. பெண்களின் துணிவு, தன்னம்பிக்கை என்பவற்றை வளர்த்து அவர்களை அபிவிருத்தி யின் பங்காளிகள் ஆக்குதல் மிகமிகத் தேவையான ஒன்று. பெண்களைப் புறந்தள்ளி, அவர்கள் பலவீனமானவர்கள் என்று ஒதுக்கிய காரணத்தி னால்தான் கடந்த காலங்களில் பல திட்டச் செயற்பாடுகளில் நாம் தோல்வியடைந்துள்ளோம். பெண்களின் ஆளுமை, சிந்தனை வளர்ச்சி என்ப வற்றை ஆண்கள் நம்பிக்கையுடன் ஏற்றுத்தான் ஆகவேண்டும். அவர்களை சவாலாகவோ அன்றி, ஆணை மதிக்காத பெண் குடும்பத்திற்கு ஆகாதவள் என்று தள்ளிப்போடுவதைப் போன்ற பிற்போக்கு வாதம் என்றுமே பொருந்தப் போவதில்லை.

பெண் வேலை வாய்ப்புக்களைப் பெற்று வேலை செய்யும்போது அவள் சுய சார்புடைய வளாக, திட்டங்களை சரியாக செயற்படுத்துபவளாக, ஆண்களோடு ஒத்து வேலை செய்பவளாக தனது ஆளுமையை, திறமையை வெளிக்காட்ட வேண்டும் எனச் சமூகம் எதிர்பார்க்கின்றது. ஆனால், அதே பெண் குடும்பத்தினுள் அடங்கி, ஒடுங்கி, கட்டுப்பட்ட வளாக, உடல்ரீதியான அழுத்தங்களுக்கும் உள்ளாவது எவ் வகையில் நியாயம்? சமூகம் எதிர்பார்க்கும் ஒன்றுக் கொன்று முரணான எதிர்பார்ப்புக்களால் பெண் தன் சுயஆற்றலை இழந்து சலிப்புத்தன்மை உடைய வளாக மாற இடமளிக்கப்படுகின்றது. பெண்ணின் மாறுபட்ட, எதிர்பார்ப்புக்களுக்கு முகம் கொடுத்து, வாழ்க்கையில் தமது உரிமைகள், நியாயங்களைத் தொலைத்துவிட்ட பல பெண்களை சமுதாயம் இன்றும் ஒளித்து, மறைத்து வைத்திருக்கின்றது. வெளிவந்த ஓரிரு சம்பவங்களில் உதாரணத்திற்காக ஓர்சம்பவம்;

நானும் அம்மாவும் ஒரு தாயையும் மகளையும் போல பழகியதே இல்லை. தோழிகள் போலத்தான் பழகினோம். என் முதல் நண்பி அம்மாதான் என எல்லோரிடமும் பெருமையாகக் கூறுவேன். இந்த நிலையில்தான் என் வாழ்க்கையில் நுழைந்தது காதல். அதைக் கூட முதலில் அம்மா விடம் தான் சொன்னேன். அவரைக் கட்டிக் கொண்டால் சந்தோசமாக இருப்பேன் என்று. அவருடைய சாதி விவரங்களை அறிந்த அம்மா அந்தச் சூழலில் சிநேகிதியாக இல்லாது பொறுப்பான தாயாக நடக் கிறேன் என்று அப்பாவிடம் கூறிவிட வானத்திற்கும் பூமிக்கும் குதித்த அப்பா திருமண ஏற்பாடுகளை செய்து முடித்தார். ஆனால் அம்மா எனது உணர்வுகளுக்கு மதிப்பளிக்கவில்லை. திருமணத்தில் முடிவெடுக்கும் உரிமை ஒரு சதவீதத்திற்குகூட எனக்கு இல்லை என்ற அம்மா, அப்பாவின் இந்த நடவடிக்கைகள் தந்த ஏமாற்றத்தை ஜீரணிக்கு முன்பே எனது திருமணம் நடைபெற்று முடிந்தது.

தாலி கட்டிய பின் கணவன் என்னுடன் கதைத்த முதல் வார்த்தை

"நீ ஏற்கனவே யாரையோ விரும்பினனீ தானே? நீ எப்படி நல்ல பெண்ணாக இருப்பாய். ஆட்டக் காரி! நான் உன்னைக் கட்டினதே பெரிய விடயம், எனவே அதற்கான பெறுமதியை நீ தரவேண்டும்."

என்று கேட்டு சீதனப்பணம் தவிர மேலதிகமாகத் தனது தங்கையின் திருமணத்திற்காக 12 இலட்சம் பணம் வாங்கிக் கொண்டார்.

அவர் பெரிய பொறியியலாளராக இருந்தும் என்ன பயன். ஒரு பெண்ணுக்குரிய அந்தஸ்து சரி, அதுவேண் டாம், என்னை ஒரு உயிராகக்கூட மதிக்கவில்லை.

என்னைத் தொடும்போதுகூட என்னைப் பெண் ணாக நினைக்காது ஓர் இயந்திரமாக நினைப்பார்.



அவருடைய இந்த முரட்டுத்தனம் வீட் டில் என்னுடன் மட் டும்தான். ஆனால், வெளியே கேட்டால் இப்படி இவ்வளவு வக்கிரமானவர் என் பதனை எவருமே நம்பமாட்டார்கள். வெளியே சிரித்த முகத் துடன் மிகவும் பணி வாக இருப்பதுபோல காட்டிக் கொள்வார்.

திருமணமாகி ஆறாவது மாதம் எனது வயிற்றில் உயிர் ஜீரணித்தது. எந்த சந்தோசமு மற்ற நான் என்னுள் வளரும் உயிரை அணுவணு வாக இரசித்து அதனுடன் கதைத்துக் கொள்வேன். இதனைக் கவனித்த அவர் சொன்னார்.

"உடனடியாக 5 இலட்சம் வாங்கித்தராவிட்டால் இந்தக் குழந்தைக்கு நான் அப்பனில்லை என்று சொல்வேன்" என்றார்.

எனக்கு நடக்கும் கொடுமைகளை நான் அம்மா விடம் சொல்லாததால் பணவிடயத்தில் மட்டும்தான் இவ்வாறு நடந்து கொள்கின்றார் என்று நினைத்து நகைகளை விற்றுக் கேட்டதைக் கொடுத்தார்.

மீண்டும் என்னுள் இன்னொரு ஜீவனும் உயிர்த் தது. பிள்ளைகள் வளர வளர பிள்ளைகளின்மேல் அன்பைப் பொழிந்தார். பிள்ளைகள் சின்னவர்களாக இருந்ததனால் அவர்களிடம் இவரைப்பற்றி சொல் லாமல் வளர்த்து விட்டேன். அவர் பிள்ளைகளுடன் T.V. பார்க்கும்போது கூறுவார் பைத்தியக்காரப் பெண்ணைக்காட்டி....,

"இப்படித்தான் உங்கட அம்மாவும், உங்கட அம்மா ஒரு அழுமூஞ்சி...!

ஆனா ஒரு பெரிய ஆட்டக்காரி! உங்கட அம்மா சிரித்துப் பார்த்திருக்கிறீங்களேடா?

அம்மாவ கூப்பிடுங்கோ! பைத்தியக்காரி!"

என்று கூறி பிள்ளைகளை கூப்பிடச் சொல்லு வார். இதனால் முன்பள்ளியில் ஆசிரியராக இருக்கும் எனக்கு என்னைப்பற்றிய சந்தேகத்தில் நடுங்குகின்றது. நான் புதுச்சேலை வாங்கினால் "ஏன் முந்தி விரும்பினவனுக்கும் இந்தக்கலரோ பிடிக்கும்? அல்லது அவனும் அங்குதான் படிப்பிக்கிறானோ?" என்று கேட்பார்.

திடீரென 10 பேருக்கு வகைவகையாகச் சமைக்கச் சொல்லிவிட்டு அவரது அண்ணா, அக்கா பிள்ளைகளை என்னிடம் விட்டுவிட்டு அவர்களுடன் சினிமா பார்க்கச் செல்லுவார். வீட்டிலே சம்பள மில்லாத வேலைக்காரியாக இருக்கிறேன். வெளியிடங் களில் தான் என்னை அதிகாரம் செய்வதாக மற்றவர் களுக்குக் காட்டுவதில் அவருக்கு ஒரு அற்ப சந்தோசம். பஸ்ஸில் போகும்போது

"தலையிடிக்குது பனடோலை எடுத்துத்தா" என்று கேட்பார்.

"நீயெல்லாம் ஒரு மனுசியே! ஒரு இடத்திற்குப் போறதெண்டால் இதையெல்லோ முதல் எடுக்க வேணும் மூதேவி, வெருளிதான் உன்ர பிழையை உனக்கு ஒத்துக் கொள்ளத் தெரியேல்ல எனக்கு எதிரா திருப்பித்திருப்பி கதைக்கிறாய் நாயே"

என்று அவர் சொல்லும்போது ஏனையோரது பரிதாபமான பார்வை என்மீதிருக்கும். சாப்பாட்டில் குறைய உப்புப் போட்டிருந்தால் அவர்களுக்கு முன் என் கொண்டையைப் பிடித்து

"சனியனே இவ்வளவு காலம் சமைக்கிறே உனக்கு ஒரு அனுபவம் இல்லை" என்று அடிப்பார். 6 வருடங்களும் என் அம்மாவிடம் போகாமல் தடுத்து விட்டார். ஒருநாள் அம்மாக்கு எல்லாக் கதையையும் கூறி அவரைப் பிரிந்து உங்களுடன் வரட்டுமா என்று கேட்ட போது, அம்மா எனது தலையைத்தடவி "உன் பிரச்சினை எனக்கு விளங்குது. ஆனா உனக்கு ஒரு தங்கையிருக்கிறாள். இந்த நிலமை தெரிந்தால் அவளைப் பெண் எடுக்க மாட்டார்கள். உனக்கும் இரண்டு பொம்பிளைப் பிள்ளையள் இருக்கினம். உனது மகளின் திருமணத் தின் போது அம்மா, அப்பாவை பிரிந்திருக்கின்றாள் என்றால் உன் பெண்ணைக் கட்ட விரும்ப மாட்டார்கள்" - என்றார்.

இவ்வளவு காலம் எனது அம்மாவுக்காக வாழ்ந்தேன். இனி பிள்ளைகளுக்காக வாழ்கி றேன். எப்போது எனக்காக வாழப்போகின் றேன்???

கணவர் துன்புறுத்தலுக்கு அப்பால் தனது வாழ்க்கையையே தொலைத்துவிட்டாள்.

வேதனைகள் எங்களுக்கு மட்டுமே சொந்த மானவையல்ல. ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் ஒவ்வொரு கண்ணீர்க்கதைகள் இருந்து கொண்டு தான் இருக்கின்றன. நமக்கான வாழ்வை, நமக்கான துணிவை கண்டெடுக்க வேண்டியது நாம்தான்.

பைரவி

**மகளிர் அபிவிருத்தி நிலையம், யாழ்ப்பாணம்.** (சி/557001)


# ஓமெக்ஸ் ஹொட்டல்
# Omex Hotel
(குளிரூட்டப்பட்டது)

1 ஆவது ஆண்டு

இன்று முதலாம் ஆண்டின் நிறைவில் 2 ஆம் ஆண்டில் காலடி வைக்கின்றது என்பதை எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியுடனும் பெருமகிழ்வுடனும் அறியத்தருகின்றோம்.



பிராந்திய சுகாதார தரப்படுத்தலில் இடம்பிடித்து சுவைப்பிரியர்களின் நன்மதிப்பைப் பெற்ற எமது சைவ, அசைவ ஸ்தாபனம் சுத்தமாகவும் ருசியாகவும் தயாரித்து வழங்கும் உணவுகள்

- புரியாணி வகைகள், பிறைட் றைஸ் வகைகள் (சிக்கன், மட்டின், மரக்கறி, கணவாய், இறால், மீன்)
- சாப்பாடுகள்
- கிறீம் வகைகள் : ஸ்பெஷல், நட்ஸ், கிறிப்ஸ், வெனிலா, சொக்லேற்
- மென்பான வகைகள் (நெல்லி, சர்பத், சோடா)

கொத்து றொட்டி எந்த நேரத்திலும்

களியாட்ட நிகழ்வுகள், வேறு விழாக்கள், வீட்டு நிகழ்வுகளுக்கு ஓடர்கள் செய்து விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: இன்று எமது ஸ்தாபனத்துக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு விசேட அன்பளிப்புகள் வழங்கப்படும்.

எமக்கு வேறு கடைகளோ கிளைகளோ இல்லை.

இந்த மகிழ்ச்சியான தருணத்தில் உங்களுடன் சில வார்த்தைகள்

தனிக் கடை ஆரம்பிக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலை வந்தபோது... எனக்கு உற்சாகமூட்டிய எனது ஊழியர்கள், பல்வேறு அழுத்தங்கள் மத்தியிலும் தொடர்ந்து கடை நடத்த கடை தந்துதவிய கட்டட உரிமையாளர் திரு.ராஜாராம் அவர்கள், பணம், பொருள் உதவிசெய்த நண்பர்கள், உறவினர்கள், எமது வாடிக்கையாளர்கள் ஓடர்கள் எடுக்கும் பாடசாலைகள், நிறுவனங்கள், தனிப்பட்டவர்களுக்கும், எமது நிறுவனம் (Omex) வளர்ச்சியடைய உறுதுணையாயிருந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது இதய நன்றிகள் எமது வளர்ச் சிக்கு தொடர்ந்தும் உங்கள் ஆதரவை நாடும்.....

பி.உதயன்



ஓமெக்ஸ் ஹொட்டல்

372, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

வண்ணை, பெப்.9

வலி.வடக்கு தெல்லிப்பளை மற்றும் சண்டிலிப்பாய் பிரிவில் இளைஞர் யுவதிகளுக்கு கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தால் வழங்கப்பட்ட தொழிற்பயிற்சி நெறிகளில் சித்தியடைந்தோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கணனிப் பயிற்சி நிலையத்தின் மாணவன் செல்வன் பிரான்சிஸ் பிறின்சிலி விஜிதரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், தெல்லிப்பளை பிரதேச செயலர் எஸ்.முரளீதரன், கரித்தாஸ் - கியூடெக் இயக்குனர் அருட்பணி கி.யோ.ஜெயக்குமார் அடிகள் ஆகியோர் கலந்து கொள்வர். (203-160)

## இராமநாதன் நுண்கலைப்பீட மாணவர்கள் கவனத்திற்கு

யாழ்ப்பாணம்,பெப்.9

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழக மூன்றாம் வருட இசைத்துறை மாணவர்களுக்கு நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் மூன்று தினங்களுக்கு செயன்முறைப் பரீட்சை இடம்பெறும் என்று கலைப்பீடாதிபதி பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா அறிவித்துள்ளார்.

கடந்த மாதம் 29, 30, 31 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த இப்பரீட்சைகள் பிற்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (203)

## காரைநகர் தியாகராஜா ம.ம.வியில் கணனிப் பயிற்சி நெறி

ஆனைக்கோட்டை, பெப்.9

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி கணனிப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட இருப்பதாகக் கல்லூரி அதிபர் ஏ.குமரேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்ள விரும்புவோர் 16ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களை கல்லூரியில் பெற்றுப் பூர்த்தி செய்து தருமாறு அதிபர் அறிவித்துள்ளார். (203-20)

## கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தால் மாணவர்களுக்குக் காலணிகள்

வண்ணை, பெப்.9

குடாநாட்டில் அமைந்துள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவ, மாணவிகளுக்கு கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தால் காலணிகள், அப்பியாசப் புத்தகங்கள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் பயிலும் 100 மாணவ, மாணவிகளுக்கு அண்மையில் காலணிகளை நிறுவனப் பணியாளர்கள் எடுத்துச் சென்று வழங்கினர். (203-160)

# சிவராத்திரி தினத்தை முன்னிட்டு ஊரடங்கைத் தளர்த்தி உதவுக

## இந்துமா மன்றம் ஜனாதிபதியிடம் கோரிக்கை

வடமராட்சி,பெப்.9

சைவ மக்களின் விசேட தினமான சிவராத்திரி தினத்தில் சைவர்கள் வழிபாடு மேற்கொள்வதற்கு வசதியாக ஊரடங்குச் சட்டத்தை தளர்த்தி உதவும்படி அகில இலங்கை இந்துமா மன்றம் ஜனாதிபதியிடமும், பொலிஸ்மா அதிபரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக இந்து மாமன்றம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

சைவ மக்களின் பிரசித்தி பெற்ற மகா சிவராத்திரி விரதம் இம்மாதம் 23 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

மகா சிவராத்திரி விரதத்தினை இந்துக்கள் அனைவரும் இடையூறு எதுவுமின்றி சிறப்பான முறையில் அனுஷ்டிப்பதற்கு ஏதுவாக ஊரடங்கினைத் தளர்த்தி உதவுமாறும்-

அன்றைய தினம் விசேட தலங்களுக்கு வழிபாடுகளுக்காகச் செல்லும் பக்தர்களின் நன்மை கருதி விசேட போக்குவரத்துச் சேவைகளையும் ஏற்படுத்தித் தருமாறும்-

ஆலயங்களில் உள் பிரகாரங்களிலும் வெளிப்பிரகாரங்களிலும் ஒலிபெருக்கிகளைப் பாவிப்பதற்கு அனுமதியை வழங்கும்படியும்- அந்த அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (50-9)

# கல்லுண்டாய் உப்பாற்றுத் திட்டத்தை புனரமைப்புச் செய்யுமாறு கோரிக்கை

மானிப்பாய்,பெப்.9

உப்பு பெருமளவில் உற்பத்தியாகும் கல்லுண்டாய் உப்பாற்றுத்திட்டத்தை உடன் மீள்புனரமைப்புச் செய்து அதனை மானிப்பாய் ப.நோ.கூ. சங்கம் பொறுப்பேற்க வேண்டும்.

அதன்மூலம் பெருமளவு நிதியினைப் பெற்றுக்கொள்ளலாம் என்று நவாலி, எச்.எஸ்.சி.எம்.எவ். நிறுவனத் தலைவர் மானிப்பாய் பரிஷ் ப.நோ.கூ. சங்கத்தின் தலைவர் இ.வன்னியசேகரத்தைத் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஆனையிறவு, கரணவாய் போன்ற பிரதேசங்களைப் போன்று கல்லுண்டாயிலும் உப்பு பெருமளவில் விளையும் வாய்ப்பு உள்ளது.

எனவே, கல்லுண்டாய் உப்பாற்றுத் திட்டத்தினை விரைவில் சங்கம் பொறுப்பேற்றுப் புனரமைப்பதுடன் அதற்கூடாக சங்கப் பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பையும் வழங்கமுடியும்.

வலி.தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கத்தின் ஆலோசனையுடன் இத்திட்டத்தை மேற்கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-95)

# லயன்ஸ் கழகத்தால் மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.9

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினர் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை யில் சித்திபெற்ற கழக எல்லைக்குட்பட்ட மாணவர்களைக் கௌரவிக்கவுள்ளனர்.

இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத் தில் இந்நிகழ்வு நடைபெறும்.

அத்துடன் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் லியோ கழக அங்குரார்ப்பணம், வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மகா வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல், வரணியைச் சேர்ந்த வலுவிழந்த இளைஞருக்கு முச்சர வண்டி வழங்கல் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறும்.

கழகத் தலைவர் லயன் செ.சரவணமுத்து தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகச் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத்தின் வடமாவட்ட பிரதி செயலாளர் லயன் எஸ்.சிவராஜேஸ்வரன் கலந்துகொள்வா. (203-207)




## அரச ஊழியர்களுக்கு சிங்கள, ஆங்கில மொழிப் பயிற்சி

யாழ்ப்பாணம், பெப்.9

அரச கருமமொழித் திணைக்களத்தினால் அரச ஊழியர்களுக்கு நடத்தப்படும் இந்த ஆண்டுக்கான சிங்களம் மற்றும் ஆங்கிலம் மொழிப்பயிற்சிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த மொழிப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கும் அரச ஊழியர்கள் எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்பாக உள்ளூராட்சி திணைக்களத்தினூடாக விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-224)

## உலக நிதி நெருக்கடியும் அதன் தாக்கங்களும்

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ்ப்பாணம் முகாமையாளர்கள் கழகம் நல்லூரிலுள்ள தனது யூரோவில் மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை நடத்தவுள்ள கருத்தரங்கில் உலக நிதி நெருக்கடியும் அதன் தாக்கங்களும் என்ற தலைப்பில் வளவாளர்கள் ஆராயவிருக்கிறார்கள்.

காலை 9.30 மணிக்கு பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பேராசிரியர் பி.சிவநாதன், எஸ்.இரவீந்திரன், எஸ்.விஜயகுமார், வி.அருளானந்தம், வி.நிரஞ்சன் ஆகியோர் கருத்துரைகள் வழங்குவர்.

தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்கு குழு நிலை விவாதம் நடைபெறும். (ப)

## அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதலும் பன்னிரு திருமுறைப் பாராயண நிகழ்வும்

யாழ்ப்பாணம், பெப்.9

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தால் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதலும், பன்னிரு திருமுறைப் பாராயண நிகழ்வும் நடத்தப்படவுள்ளன.

இந்த நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை காலை 7 மணிக்கு யாழ்.பலாலி வீதி, கந்தர் மடத்திலுள்ள இந்துசமயப் பேரவை வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ நடராஜப் பெருமாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளன. (204)

## வீதிகளில் வெட்டிய பள்ளங்களால் சிரமம்

குருநகர், பெப்.9

கடந்த வருட இறுதியில் குடாநாட்டில் ஏற்பட்ட புயல், வெள்ளம் காரணமாக குருநகர் பகுதியில் வெள்ள நீர் வெளியேறுவதற்காக வீதிகளின் குறுக்கே வெட்டப்பட்ட பள்ளங்கள் இதுவரை மூடப்படவில்லை.

இதனால் இந்த வீதிகளில் பயணிக்கும் பொது மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

உரியவர்கள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (203-51)

## சைவப்புலவர் தேர்வு வழிகாட்டல் வகுப்புகள்

யாழ்ப்பாணம், பெப்.9

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினால் சைவப்புலவர் தேர்வு வழிகாட்டல் வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

இந்த வகுப்புகள் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. தொடர்ந்து சனி, ஞாயிறு நாள்களில் வகுப்புகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (203-204)







இலங்கை வங்கி, வல்வெட்டித் துறை விரிவாக்கற்கிளையின் அங்குரார்ப்பண விழா வல்வெட்டித் துறையில் விஷ்ணுசுந்தரம் கட்டடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்துவரப் படுவதை முதலாவது படத்திலும் திருமதி நளினி சிவரட்ணம் விரிவாக்கற் கிளையை நாடாவெட்டித் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும் வல்வெட்டித்துறைப் பொலிஸ் உதவி அத்தியட்சகர் எல்.பி.கே. அரவிந்த மங்கள விளக்கேற்றுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் என். சிவரட்ணம் வாடிக்கையாளர் ஒருவரிடம் இருந்து ஆரம்ப வைப்பைப் பெறுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் கீழ் வரிசையில் உள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விச் சூழலுக்குகந்ததும், உணவு வசதியுடனும் மாணவர்களுக்கான தங்குமிட வசதி

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு முன்பாக உள்ளது.
உடன் பதிவு செய்யலாம்.
**5/6, கோணாவளை வீதி, கொக்குவில்.**

(82510)



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1061 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

தனுசு 22 39 49 52

**06-02-2009**

செல்லுபடியாகும் தொடர் இல. 500447035 - 500467231

ஜக்பொட் பரிசு ரூபா. 7,938,875/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 215,650 | 20/- | 4,313,000/- |
| 2 இலக்கங்கள் | 19,780 | 40/- | 791,200/- |
| 1 இல. + லக்கினம் | 19,561 | 60/- | 1,173,660/- |
| 2 இல. + லக்கினம் | 1,811 | 200/- | 362,200/- |
| 3 இலக்கங்கள் | 519 | 1000/- | 519,000/- |
| 3 இல. + லக்கினம் | 53 | 10,000/- | 530,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 7,938,875/- | - |
| மொத்தம் | | | 8,289,060/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 257,382 | | 8,789,060/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 8,420,350/-

தொடர் இலக்கம் 400455554 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2009 பெப்ரவரி 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| பொலன்னறுவை | 500449791-5-16 |
| களுத்துறை | 500455964-7-38 |
| கேகாலை | 500459979-2-24 |
| அம்பாறை | 500454572-9-37 |
| கொழும்பு | 500460098-6-35 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேன் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.9

காரை கிட்ஸ் பார்க் முன்பள்ளியின் தொடக்க விழா இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு காரைநகர் சுப்பிரமணியம் வீதியில் அமைந்துள்ள முன்பள்ளியில் நடைபெறவுள்ளது.

காரைநகர் மணிவாசகர் சபையின் தலைவரும் ஓய்வுபெற்ற அதிபருமான பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையில் நிகழ்வு நடைபெறும்.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி. ஜெயசீலன், தீவக வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.விக்னேஸ்வரன், காரைநகர் பிரதேச சபைச் செயலாளர் இரா. லோகநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (202-250)

* * *

சுன்னாகம்,பெப்.9

பண்டிதர் க.நாகலிங்கம் ஆக்கிய செந்தமிழ் இலக்கண விளக்கம் நூலின் நான்காம் பாகமான 'மெய்ப்பாட்டியலும் மரபியலும்' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அளவெட்டி மகாஜனசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறும் இவ்வெளியீட்டு விழாவில் யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் என்.சண்முகலிங்கன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர்.

வெளியீட்டுரையினை கவிஞர் சோ.பத்மநாதனும், ஆய்வுரைகளை யாழ்.பல்கலைக் கழக தமிழ்த்துறை விரிவுரையாளர்கள் இ.குமரன், பொ.அருந்தாகரன் ஆகியோரும் நிகழ்த்துவர். (202-38)

* * *

சுன்னாகம்,பெப்.9

ஓய்வுபெற்ற சுன்னாகம் கிராம சேவகர் செ.வைத்தியநாதனின் சேவை நலன் பாராட்டு விழா இன்று திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்றத்தில் சுன்னாகம் தெற்கு விவசாயிகள் சம்மேளனத் தலைவர் க.தியாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (202-38)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.9

யாழ்.மாவட்ட ஹொக்கி சங்கம் ஹொக்கி நடுவர்களாகக் கடமையாற்றும், கடமையாற்ற விரும்புபவர்களுக்கென நடத்தும் கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (202)

* * *

சித்தங்கேணி,பெப்.9

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றிய வண.பிதா க.ஜெயசிங்கராயர் அடிகளாருக்கு பிரிவுபசார விழாவும் புதிய அதிபராகப் பொறுப்பேற்கும் வணபிதா ஏ.ஜேசுதாசன் அடிகளாரை வரவேற்கும் நிகழ்வும் நாளை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுக்கு விருந்தினர்களாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கந்தசாமியும் கலந்து கொள்வர். (202-112)


## மாபெரும் கண்காட்சியும் விற்பனையும் ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்




இடம் : யா/வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை
காலம் : (10.02.2009) செவ்வாய்க்கிழமை
நேரம் : காலை 9.30 மணி

இக்கண்காட்சியை பாடசாலை அதிபர்
திருமதி க.பொன்னம்பலம் அவர்கள் திறந்து வைப்பார்கள்
மாணவர்களுக்கான தனிப்பிரதி ஒன்றின் விலை ரூபா 30/=
ஏனையோருக்கான தனிப்பிரதி ஒன்றின் விலை ரூபா 40/=
முக்கிய குறிப்பு: 11.02.2009 தொடக்கம் தனிப்பட்ட பிரதி விற்கப்படும் விலை ரூபா 40/=

இடம்: **சிவசம்பு களஞ்சியம்**
*மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.*
*ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,*
*பருத்தித்துறை.* *செயலாளர்*

(சி/557085)



## கரித்தாஸ் - கியூடெக் யாழ்ப்பாணம்

## தொழிற்பயிற்சி நெறிகளுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம்

காலம் : 09.02.2009
இடம் : இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி
நேரம் : பி.ப.2 மணி

தலைவர்
**செல்வன் பிரான்சிஸ் பிறின்சிலி விஜிதரன்**
*(பயிலுனர், கணனிப்பயிற்சி நிலையம் - மாரீசன்கூடல்)*
பிரதம விருந்தினர்
**திரு A.சிவசுவாமி**
*(மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்)*
சிறப்பு விருந்தினர்கள்
**திருமதி ரூபினி வரதலிங்கம்**
*(பிரதேச செயலர் - சண்டிலிப்பாய்)*
**திரு.S.முரளீதரன்**
*(பிரதேச செயலர் - தெல்லிப்பளை)*
**அருட்பணி கி.யோ.ஜெயக்குமார்**
*(இயக்குநர் - கரித்தாஸ் - கியூடெக் - யாழ்ப்பாணம்)*
கௌரவ விருந்தினர்கள்
**அருட்தந்தை க.ஜேம்ஸ் சிங்கராஜர்**
*(அதிபர் - புனித ஹென்றியரசர் கல்லூரி - இளவாலை)*
**சிவஸ்ரீ இ.பாலச்சந்திரக்குருக்கள்**
*(பிரதமகுரு - ஆனைவிழுந்தான் பிள்ளையார் கோயில்)*
**திரு.தி.சிவதெட்சணாமூர்த்தி**
*(உதவி இயக்குனர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - யாழ்.மாவட்டம்)*
**திரு.க.செல்வரத்தினம்**
*(தலைவர் - பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்)*
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கரித்தாஸ் - கியூடெக்.

(சி/557072)



## டிலன் ஹொட்டல்

எமது வாடிக்கையாளரின் விருப்பப்படி மீண்டும் அனுபவமிக்க உணவு தயாரிப்பாளரைக் கொண்டு தயாரிக்கப்படும்.

- புரியாணி வகைகள்
- பிறைட் றைஸ் வகைகள்
- நூடில்ஸ் வகைகள்
- டெவல்ஸ் வகைகள்
- சூப் வகைகள்
- இந்தியன் உணவு வகைகள்
- உள்நாட்டு உணவு வகைகள்

என்பனவற்றை ஒருமுறை வந்து சுவைத்துப் பாருங்கள்

**டிலன் ஹொட்டல்**
*இல.133, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.*

(சி/556780)





# வைத்திய சேவை ஆரம்ப நிகழ்வு

## யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள "பிலிப்ஸ் நேசிங் ஹோம்"

# PHILIPS NURSING HOME





தனது வைத்திய சேவையினை மிகவும் தரமுயர்ந்த நிலையில் பூரணை தினமான இன்று திங்கட்கிழமை காலை 9.30 - 11.00 மணி வரையுள்ள சுப நேரத்தில் யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களின் அனுசரணையுடன் ஆரம்பிக்கின்றது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

**எமது சிறப்பான சேவைகள்:**

- சிறப்பான தரமுயர்ந்த வெளிநோயாளர் பிரிவு
- இரத்தம், சிறுநீர், மலம், சளி பரிசோதனை (கொம்பியூட்டர் மயமான இயந்திரத்தின் மூலம்)
- சுத்தமான, சுகாதாரமான வார்ட் (Ward) வசதிகள்
- சிறு சத்திர சிகிச்சை
- வைத்திய நிபுணர் ஆலோசனை

1.பொது மருத்துவம் (General Medicine)
2.சத்திர சிகிச்சை (Surgery)
3.என்பு முறிவு நெறிவு சிகிச்சை (Orthopasode)
4.மகப்பேற்று வைத்தியம் (Gynaecology & Obstetrics)
5.காது, மூக்கு, தொண்டை வைத்தியம் (ENT)
6.குழந்தை வைத்தியம் (Paediatrics)

- உள்ளக மருந்தக பிரிவு (Indoor Pharmacy)

(82526)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளும் குணநலன்களும்

**கேள்வி:** ஆண். வயது 25. மற்றவர்களோடு பேசும்போது என்னால் அவர்களை பார்த்துப் பேசமுடியாது. அவர்களது பார்வையை நேருக்கு நேர் பார்க்காமல் கீழே பார்த்துத்தான் பேசுவேன். இதனால், நான் பேசுவதை மற்றவர்கள் நம்புவதில்லை. பொய் பேசுகின்றேன் என்று எண்ணுகின்றார்கள். இதனால், எனது அலுவலகத்திலும் தனிப்பட்ட முறையிலும் பெரும் சங்கடத்துக்கு உள்ளாகின்றேன். பரிகாரம் கூறவும்.

**பதில்:** பேசும்போது நேருக்குநேர் ஒருவரைப் பார்த்து பேசுவதை Maintaining Eye Contact என்பார்கள். அப்படிப் பேசமுடியாதது ஒரு நோயல்ல. ஓரளவிற்கு ஒரு மனோவியல் குணம் குறியாகக் கருதலாம். இதற்குப் பரிகாரம், இந்தக் கோளாறுக்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதைக் கண்டறிந்து அதற்கு ஆவனசெய்வதே. அநேகமான இந்தப் பிரச்சினை உள்ளவர்களுக்கு முக்கிய காரணமாக விளங்குவது தன்னம்பிக்கைக் குறைவே. இதற்கு உங்கள் மேல் உங்களுக்கு நம்பிக்கை இல்லாதது; உங்கள் சிந்தனைகளைப் பற்றி நம்பிக்கையில்லாதது; அந்தச் சிந்தனைகளை - கருத்துகளை வெளியே கூறினால் கேட்பவர்கள் நம்பமாட்டார்கள் என்ற தாழ்வுமனப்பான்மை எல்லாம் காரணங்களாகின்றன. எங்களைப் பற்றி நாங்களே சந்தேகிக்கும்போது ஏற்படும் தாழ்வு மனப்பான்மை இந்தக் கோளாறை மேலும் அதிகரிக்கின்றது. இதனால், உங்கள் பேச்சைக் கேட்பவர் உங்கள் மீதும் உங்கள் கருத்தின் மீதும் நம்பிக்கை இல்லாததைப் போல நடந்துகொள்வார். இதைப் பார்க்கும் உங்களுக்கு மேலும் தன்னம்பிக்கை குறைகிறது. இந்த 'விஷவட்டம்' திரும்பத் திரும்ப நடைபெறுவதால் உங்கள் பிரச்சினை அதிகமாகின்றது. நீங்கள் இந்தக் கோளாறில் இருந்து மீட்சிபெற இந்த விஷவட்டத்தை ஓரிடத்தில் முறிக்கவேண்டும். உங்களை - உங்கள் எண்ணங்களை - கருத்துகளை முதலில் நீங்கள் நம்பவேண்டும். உங்கள் பலம் என்ன - பலவீனம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். பலத்தை அறிந்து அதனை மேம்படுத்தவேண்டும். பலவீனத்தைப் புரிந்து அதிலிருந்து விடுபடவேண்டும். மற்றவர்கள் உங்கள் பேச்சை - கருத்தை ஏற்பார்களோ, மாட்டார்களோ என்று சந்தேகமின்றி உங்கள் கருத்தை நெஞ்சை நிமிர்த்தி - முகம்பார்த்து தெரிவிக்கவேண்டும். உங்கள் கருத்து மற்றவர்கள் ஏற்க முடியாத கருத்தாக இருந்தாலென்ன, உங்களுக்கு சரியென்று பட்டது என்று துணிவுடன் வெளியிடவேண்டும். இந்த உலகில் எந்த மனிதரும் பூரணமானவர் இல்லை என்பதை மனதிற் கொள்ளுங்கள். எமது தவறுகளிலிருந்து அறிவுபெற்று முன்னைய நிலையை விட, உறுதியாகுவதுதான் முக்கியம்.

*

**கேள்வி:** எனது மகளுக்கு இடதுகையில் விரல்கள் இல்லை. மற்றும் எதுவித கோளாறுகளோ, அங்கவீனமோ இல்லை. இந்தக் கோளாறை நிவர்த்தி செய்யமுடியுமா?








**பதில் :** தற்போதைய விஞ்ஞான முன்னேற்றத்தில் உங்கள் மகளின் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது. கால்விரல்களை எடுத்து - கைவிரல்கள் போல் பொருத்தலாம். இதற்கு Plastic Surgery அல்லது Reconstructive Surgery நிபுணர் ஒருவரின் ஆலோசனை அவசியம். இந்தச் சத்திரசிகிச்சையை ஆறு வயதுக்கு பின்னரே செய்வது நல்லது.

*

**கேள்வி:** எனது மகன் வயது 4. அவர் இலகுவில் தனது உணர்வுகளை, உணர்ச்சிகளை, விருப்பு - வெறுப்புகளை வெளிக்காட்டுவதில்லை. உதாரணமாக, இவரது விளையாட்டுப் பொருட்களை மற்றக் குழந்தைகள் எடுத்து விளையாடினாலும் பார்த்துக்கொண்டு அமைதியாக இருப்பார். அதேபோல் மற்றக் குழந்தைகள் விளையாடும்போது சாதாரண குழந்தைகள் சேர்ந்து அவர்களது விளையாட்டுப் பொருட்களை பறித்தெடுத்து விளையாடுவது போல் இவர் செய்யமாட்டார். சும்மா பார்த்துக்கொண்டிருப்பார். வீட்டில் அமைதியாயிருப்பார். வீட்டிற்கு வரும் விருந்தினர்களின் குழந்தைகள் பிரளிபண்ணினால் சங்கடப்படுவார். நேற்று வீட்டிற்கு வந்த 3 வயது பிள்ளை அவரை உதைத்தது. எனது மகனுக்கு வலியினால் கண்ணீர் வந்தாலும் புன்னகைத்துக் கொண்டிருந்தார். இது ஒரு சாதாரண குழந்தையின் உணர்ச்சிவெளிப்பாடு அல்ல என்பது எனக்கு புரிகிறது. எதற்காக உணர்ச்சிகளை- அதுவும் சாதாரணமாக ஒரு செயலுக்கு- மனிதருக்கு ஏற்படும் உணர்வுகளை எனது மகன் வெளிக்காட்டுவதில்லை.

**பதில் :** ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்களுக்கே உரிய குணநலனும் ஆளுமையும் (Temperament & Personality) இருக்கும். பெற்றோர் குழந்தை களுக்கு ஆதரவாக இருக்கவேண்டுமே ஒழிய அவர்களை ஓர் இலட்சிய சாதாரண குழந்தையாக மாற்றத் தெண்டிக்கக்கூடாது. உங்கள் மகனைப் புரிந்துகொள்ள அவருடன் கதைகொடுங்கள். அவர் விளையாடிக் கொண்டிருக்கும் போது, அவர் தனது விருப்பங் களை, கருத்துகளைப் பேசுவார். அதற்குக் காதுகொடுங்கள். நீங்கள் அவர் ஏதாவது கூறுவார் என்று தெண்டிக்கக் கூடாது. ஆனால், அவரது நல்ல நண்பர் போல் அவர் உங்களோடு பேசுவதை காதுகொடுங்கள். அநேகமான பெற்றோர் தமது குழந்தைகள் சண்டைக்காரர்கள். மற்றக் குழந்தைகளோடு சண்டை பிடிக்கின்றார்கள் என்றுதான் கவலைப்படுகின்றார்கள். உங்கள் மகன் நேரெதிராக இருக்கின்றான். இப்பொழுது எதுவும் செய்யாதீர்கள். "உன்னைப் பாதுகாக்க வேண்டும், உனது பொருட்களைப் பாதுகாக்க வேண்டும் என்று உங்கள் மகனுக்கு அறிவுறுத் துங்கள். ஆனால், ஒன்றைமட்டும் நினைவில் இருத்துங்கள். எல்லாக் குழந்தைகளும் ஒரே மாதிரி இருக்க மாட்டார்கள். சிலவேளைகள் தனக்கு ஏற்படும் இக்கட்டான நிலைகளுக்கு ஏற்ற வியூகங்களை உங்கள் மகன் எண்ணிக் கொண்டிருப்பார். எனவே, நீங்கள் அறிவுறுத்தும் தீர்வுகளை அவர் ஏற்றுக்கொள்ளமாட்டார். உங்கள் மகனின் பிரச்சினை பெரிதானதொன்றல்ல. *

இலவச மருத்துவ ஆலோசனை பெறுங்கள்
நீங்களும் கேள்விகளை அனுப்பி மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம்.
நீண்ட கால அனுபவம் உள்ள பிரபல டாக்டரும் விஞ்ஞானத்துறை எழுத்தாளருமான டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம் பதில் தருகிறார்.
இலவச மருத்துவ ஆலோசனை
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# ராசி பலன்

09-02-2009 முதல்
15-02-2009 வரை

பொ.சந்திரலிங்கம்




அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு. எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.





கார்த்திகை 2, 3, 4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர்,அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீகஎண்ணம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்கும்.




மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை,புனர்பூசம் 1, 2, 3

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர். உதவியை எதிர்பார்ப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மனஅமைதி இருக்கும்.




புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர். மன அமைதி இருக்காது.




மகம், பூரம், உத்தரம் 1

காரியசித்தி உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு.தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.மனஅமைதி இருக்கும்.




உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகும். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் உண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகஎண்ணம் [illegible]லாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.




சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். பெற்றோர் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள்கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.




விசாகம் 4, அனுசம், கேட்டை

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகஎண்ணம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மனஅமைதி இருக்கும்.




மூலம், பூராடம், உத்தராடம் 1.

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.




உத்தராடம் 2 ,3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2

காரியசித்தி உண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் உண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். மன அமைதி இருக்காது.




அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3

காரியசித்தியுண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர்.பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் மன அமைதி இருக்கும்.




பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம்அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் உண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிகாமம் அ.த.கவில் தற்காலிக வகுப்பறைகள்

கொடிகாமம் அ.த.க.வித்தியாலய வளாகத்தில் தற்காலிக வகுப்பறைத் தொகுதிகள் அமைக்க தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வித்தியாலயத்தில் தற்போது நலன்புரி நிலையம் அமைக்கப்பட்டுள்ளதால் வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள தனியார் வீடுகளில் வசதிகளற்ற நிலையில் வகுப்புகள் இடம்பெற்று வருகின்றன. இதனால் தற்காலிக வகுப்பறைக் கொட்டில்கள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வகுப்பறைக் கொட்டில்கள் அமைக்கப்பட்டதும் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களும் வித்தியாலயத்தில் இணைக்கப்படலாமெனவும் கூறப்பட்டது.

(203-207)

## இரண்டாம் ஆண்டு நினைவுகளில்...

### அமரர் இராசரத்தினம் புஸ்பராசா

(வசந்தன்)



கனிவான உமது
முகமும் பணிவான
உமது பேச்சும்
துணிவான
இன்சொல்லோடும்
வாழ்ந்த உமது
மேனிவிட்டகன்று
வருடம் இரண்டு
ஆனாலும்
ஆறாது உமது
பிரிவுத்துயரம்
வசந்தன்
நாங்கள் பூமியில்
வாழும் காலம் வரை
இமை விட்டகலாது
எமது இதயச்
சுமைகள்.

தாயின் மடியில்: 13.04.1978
ஆண்டவன் அடியில்: 09.02.2007

இரண்டாம் ஆண்டு நினைவில் உமது
ஆத்ம சாந்திக்கு என்றும் இறைவனை வேண்டி நிற்கும்:

குடும்பத்தினர், உறவினர்கள்.
வைத்தியசாலை வீதி,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. (82465)

## கால் நடைகளால் பயிரழிவு

நீர்வேலி மேற்கு புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் கட்டாக்காலி கால்நடைகயால் பயிரழிவு ஏற்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். குறிப்பாக மேய்சலுக்காக விடப்படும் ஆடுகள், மாடுகள் என்பன விளைநிலத்திற்குள் புகுந்து பயிர்களை மேய்ந்து அழித்து விடுவதாகவும் கோழிகளும் பல் வேறு தானியப் பயிர்களுக்கு சேதம் விளைவித்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ் விடயத்தில் கால்நடை வளர்ப்பாளர்கள் கவனம் எடுக்க வேண்டும். இல்லாவிடில் கால்நடைகளைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட விவசாய அமைப்புக்கள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென விவசயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (202-72)

## அச்செழு ஆலயத்துக்கு புதிய தேர்க் கொட்டகை

அச்செழு அம்மன் ஆலயத்திற்கு புதிதாக தேர்க் கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது ஆலயத்தின் முன் மண்டபத் திருப்பணி வேலைகள் தொடங்கி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (202-72)

# வினைதிறன்காண் தடை தாண்டல் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அபிவிருத்தி உதவியாளர்களுக்கான முதலாவது, இரண்டாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சைகளை நடத்தவுள்ளது.

இந்தப் பரீட்சைகள் முறையே எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கும், மறுநாள் ஞாயிற்றுக் கிழமை 9 மணிக்கும் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளன.

கே.நிகேதினி, என்.சுமதி ஆகிய பரீட்சார்த்திகள் உட்பட அறிவிக்கப்பட்டவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர் என இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட பரீட்சார்த்திகள் நாளை செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் மாவட்ட செயலக நிர்வாகக் கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (204)

## மரண அறிவித்தல்

### திருமதி விஜயரட்ணம் புஸ்பராணி



நல்லூர், செல்லர் வீதியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயரட்ணம் புஸ்பராணி கடந்த (06.02.2009) வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் திருநாவுக்கரசு விஜேரட்ணத்தின் (ஜேர்மனி) அன்பு மனைவியும் ஜேர்மனியை வதிவிடமாகக் கொண்ட சித்தேஸ், சங்கீதா ஆகியோரின் அன்புத் தாயும் பிந்துஷாசினியின் அன்பு மாமியும் காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு -பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் திருமதி செல்வரட்ணம் லைலாராணி (லண்டன்), சுகுமார் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), திருமதி இராஜரட்ணம் பிறேமராணி (தே.வீ.அ.அ.சபை- திருகோணமலை), ரகுமார் (யா.மா. சபை), சுரேஸ்குமார் (கனடா), திருமதி உதயகுமார் பத்மராணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (13.02.2009) வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.


இந்த அறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.சுகுமார்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்- சகோதரன்),
நா.ரகுமார்
(பொது சுகாதார பரிசோதகர் யா.மா.சபை- சகோதரன்).

124/3, செல்லர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (82528)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 25 . 05 . 1937



விண்ணில் 22 . 01 . 2008

### அமரர் சின்னையா குணரட்ணம்

(லக்கி கிறீம் கவுஸ் உரிமையாளர்)

திதி: பூரணை (09.02.2009)

ஆண்டு ஒன்று சென்றதுவோ
ஆறுமோ எம் நெஞ்சம்
ஆறுதல் சொல்ல ஆரிருந்தென்ன
உங்கள் அன்பிற்கு ஈடாகுமோ?

தேறுதல் வார்த்தைகளால்
எம் துயர் நீங்கிடுமோ?
கண்ணை இமை காப்பது போல்
எம்மைக் காத்திருந்தீர்கள் ஆயினும்
காலன் தான் கவர்ந்தனனே உம் உயிரை

கண்களில் நீர் இல்லை ஐயா
கவலையால் மனம் ஆழ்ந்ததையா
என்றும் உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (09.02.2009) திங்கட்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

"செல்வச்சந்நிதி வாசா",
சுதுமலை வடக்கு, மானிப்பாய். (82532)

## தாவடியூர்

# தர்மலிங்கம் -பாக்கியம் தம்பதியரின் ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 10.12.1915 மண்ணில்: 11.11.1926
விண்ணில்: 02.02.2008 விண்ணில்: 22.01.2008

" எம்தாய் விண்ணுலகெய்திய பன்னிரண்டாம் நாளில்
எந்தையும் சென்றார் உவந்து"

எந்தையும் தாயும்

மக்கள் மருமக்கள் மாண்பான பேர பூட்டமக்களை
த்க்க பெருஞ் சிறப்பாகத் தரணியில் வளர்த்த
மிக்க புகழ்சான்ற எந்தையே! எமதன்னையே!
முப்போதும் வேண்டுகின்றோம் உமதான்மா சாந்திபெற.

தைப்பூச நன்நாளில் எத்திசையும் போற்றிசெய
தப்பாத இறைபற்றோடு விண்ணடைந்த தாயே!
அப்பன் அடியிணையை ஏகாதசியடைந்த தந்தையே!
எப்போதும் வேண்டுகின்றோம் உமதான்மா சாந்திபெற.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"பன்னாலை வாசம்",
தாவடி தெற்கு, கொக்குவில். (82522)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் கால்கோள் விழாவில் எடுக்கப்பட்ட படம்.



பருத்தித்துறை தட்டாதெரு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பாடசாலை முகப்புத் திறப்பு விழாவிலும் சாதனை மாணவர்கள் கௌரவிப்பு விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவத்துறைப் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் சாதனை மாணவனொருவருக்குப் பரிசில் வழங்குகின்றார்.



ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியை மக்கள் வங்கி கிளை முகாமையாளர் மா.சந்திரகாந்தன் ஆரம்பித்து வைக்கின்றார்.

அருகில் திருமதி இந்திராதேவி சந்திரகாந்தன், உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன், பாடசாலை அதிபர் செல்வி ந.பிரதா, முன்னாள் அதிபர் செ.சிவநடராசா ஆகியோர் நிற்பதையும் காணலாம்.




இளவாலை மாரீசன்கூடல் றோ.க.த.க.பாடசாலையின் கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மாதகல் பங்குத் தந்தை அருட்திரு ஆர்.எச்.நேசநாயகம் அடிகளாரும் மாணவர்களும் பெற்றோரும் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# செய்திச்சரம்... செய்திச்சரம்...

## போயா ஆன்மீக நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.9

பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா யாழ். நிலையத்தில் போயா ஆன்மீக நிகழ்வு இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அதிகாலை 5 மணிக்கு நகர சங்கீர்த்தனம் இடம்பெற்று காலை 9 மணிக்கு பஜனை, சிறப்புச் சொற்பொழிவு, நாராயண சேவை ஆகிய நிகழ்வுகள் இடம் பெறும். (202-7)

## கலாசார பேரவைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.9

யாழ்ப்பாணப் பிரதேச கலாசார பேரவையின் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு கலாசாரப் பேரவையின் அங்கத்தவர்கள் அனைவரையும் சமூகம் தருமாறு யாழ்.பிரதேச கலாசார பேரவைத் தலைவர் க.கந்தவேள் கேட்டுள்ளார்.

அத்துடன் சிற்பம், நடனம், நாடகம், நாட்டுக்கூத்து, பத்திரிகை, கலை இலக்கியம் ஆகிய துறைசார் கலைஞர்களையும் வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-7)

## கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,பெப்.9

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தால் எந்திரவியல் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவத்தினை எதிர்வரும் மார்ச்மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்கலாம் என யாழ்.பிராந்திய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (202-7)

## சீருடைத் துணி விவரம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம்,பெப்.9

தீவக வலயப் பாடசாலை மாணவர்களுக்கு 2009ஆம் ஆண்டுக்கான சீருடைகள் வழங்கப்பட்டு நிறைவு பெற்றுள்ளன.

ஒவ்வொரு பாடசாலை அதிபர்களும் தமக்கு வழங்கப்பட்ட சீருடைத்துணி விவரம், மாணவர்களுக்கு வழங்கிய சீருடை விவரம், கையிருப்புப் படிவம், மேலதிக தேவை இருப்பின் விவரம், சீருடை மீதி இருப்பின் அதன்விவரம் என்பவற்றை உடனே சமர்ப்பிக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார். (202-7-267)

## தென்மராட்சியில் கோழி வளர்ப்பு ஊக்குவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.9

தென்மராட்சிப் பிரதேசத்தில் கோழி வளர்ப்பினை அதிகரிக்கும் பொருட்டு கோழிக் குஞ்சுகள் சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகத்தினால் மாதாந்தம் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளது.

அச்சுவேலி கோழிப் பண்ணையிலிருந்து ஒருநாள், ஒருமாதம், இரண்டுமாதம் நிறைந்த குஞ்சுகளும், ஐந்து வார காடைக் குஞ்சுகளும் பெற்று விநியோகிக்கப்படவுள்ளன.

கோழிக்குஞ்சுகள் தேவைப்படுவோர் கால்நடை வைத்தியர் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-207)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், பெப்.9

தென்மராட்சி பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தினரால் கடந்த வருடம் நடத்தப்பட்ட தையல் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்ட யுவதிகளால் தயாரிக்கப்பட்ட பொருள்களின் கண்காட்சி எதிர்வரும் 14,15ஆகிய திகதிகளில் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறும்.

பயிலுநர் குழுத் தலைவி செல்வி எஸ்.லோஜிதா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசனும் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலர் தா.தியாகமூர்த்தியும் கலந்துகொள்வர். (203-207)

## வலி.தென் மேற்கில் மீளாய்வுப் பணிகள்

சித்தங்கேணி, பெப்.9

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் மாதாந்த பொதுசன உதவிப் பணம் பெறும் அட்டைகள் இரண்டாம் கட்டமாக மீளாய்வு செய்யப்படவுள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் காலை 9 மணிக்கு மீளாய்வு பணிகள் நடைபெறவுள்ளன.

சண்டிலிப்பாய் ஜே/143 பிரிவில் 16ஆம் திகதியும், மாகியப்பிட்டி ஜே/144 பிரிவில் 17ஆம் திகதியும், வடலியடைப்பு ஜே/145 பிரிவில் 19ஆம் திகதியும், பண்டத்தரிப்பு ஜே/146 பிரிவில் 24ஆம் திகதியும், பிரான்பற்று ஜே/147 பிரிவில் 26ஆம் திகதியும், சில்லாலை வடக்கு சாந்தை ஜே/148 பிரிவில் 27ஆம் திகதியும் மீளாய்வுப் பணிகள் இடம்பெறும். (202-112)

## சுயதொழில் கொடுப்பனவு

கோப்பாய், பெப்.9

வட்மாகாண சமூகநலத்துறை திணைக்களத்தால் வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் சுயதொழில் உதவித் தொகையாக 21 பேருக்கு தலா 7 ஆயிரத்து 500 ரூபா நிதிக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள இக்கொடுப்பனவை 2ஆம் கட்டமாகப் பெறுவது குறிப்பிடத்தக்கது.

இச்சுயதொழில் கொடுப்பனவு மூலம் ஆடுவளர்ப்பு, மாடுவளர்ப்பு, கோழி வளர்ப்பு, சிறுகடை போன்ற சிறு தொழில் முயற்சிகளை மேற்கொள்கின்றனர். (202-72)

## பன்றிகளால் பயிரழிவு

கோப்பாய், பெப்.9

நீர்வேலி, அச்செழுப் பகுதிகளில் பன்றிகளால் பயிரழிவுகள் ஏற்படுவதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இரவு வேளைகளில் கூட்டமாக வரும் பன்றிகள் கரட், பீற்றூட் போன்ற கிழங்கு வகைகளைத் தின்று தீர்ப்பதுடன் பெருமளவானவற்றை கிண்டிக்கிளறி சேதப்படுத்தியும் வருகின்றன. மேலும் புகையிலைக் கன்றுகளையும் கிளறி அழித்து விடுவதாகவும் கவலை தெரிவித்தனர். (202-72)

## சண்டிலிப்பாய் பிரதேசத்தில் சுயதொழில் கொடுப்பனவு

சித்தங்கேணி, பெப்.9

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கு சுயதொழில் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

கொடுப்பனவு பெற விரும்புபவர்களும் மேலதிக விவரம் தேவைப்படுபவர்களும் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் வே.அருந்தவராஜாவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-112)

## புயலால் விழுந்தமரம் இன்னும் அகற்றப்படவில்லை

சுழிபுரம், பெப்.9

வழக்கம்பரையில் 'நிஷா' புயலால் வேரோடு சாய்ந்த ஆலமரத்தின் அடிப்பாகங்கள் இதுவரை அகற்றப்படாமல் கிடக்கின்றன. இதனால் போக்குவரத்தில் சிரமங்கள் ஏற்படுவதாகப் பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

புயலால் அடியோடு சரிந்த மரம் பாரிய துண்டுகளாக வெட்டப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டன. எனினும் அடிப்பாகத்தின் குற்றிகள் அகற்றப்படவில்லை. இதனால் வாகனங்கள் செல்வதற்கும் இடைஞ்சல்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (202-28)

## மாணவர்களுக்கு கோலப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.9

தீவக வலயப் பாடசாலைகளில் பயிலும் ஆரம்பப்பிரிவு மாணவர்களிடையே கோலப்போட்டி நடைபெறவுள்ளது.

போட்டிகள் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் நடாத்தப்பட்டு முடிவுகள் கோட்டக்கல்வி அதிகாரிகளிடம் வழங்கப்படவேண்டுமெனவும் தொடர்ந்து கோட்ட, வலய மட்டப் போட்டிகள் நடத்தப்படும் எனவும் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (202-7-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோவையார் முற்றும் ஓதுதல்

கைதடி ஸ்ரீ சச்சிதானந்தா ஆச்சிரமத்தில் அமைந்துள்ள மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் இம்மாதம் முதல் திருக்கோவையார் நூல் முற்றும் ஓதுதல் இடம்பெறுகின்றது.

ஆச்சிரமத் தலைவர் இ.குழந்தை வடிவேல் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (202-28)


## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY)

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம்

மீண்டும் (10.02.2009) செவ்வாய்க்கிழமை யாழ்.வருகிறார்

மருந்துகள் குறிப்பிட்டளவே கொண்டுவர முடியும் என்பதால் சம்பந்தப்பட்ட நோயாளர்கள் தங்களுடைய பாதிப்புக்களை உடனே தொலைபேசியில் (0719315664. 0652224019, 0777569205) தொடர்பு கொண்டால் அவர்களுக்கேற்றவாறு மருந்துகளைக் கொண்டுவருவார்.

ஆரம்ப நிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளை போகுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத்தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றி பெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

Sexuel Disorders (ஆண்மைச் சக்தி குறைவு) [பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர] எவ்வித மோசமான தாம்பத்தியக் கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும், திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாகலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீ பாலாஜி இன்
293, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Contact No.:0719315664.


## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 . 05 . 1930



மறைவு 28 . 01 . 2002

திருமதி தம்பிஜயா நாகம்மா (பராசசிங்கம்)

ஆண்டுகள் ஏழு சென்றாலும்- உங்கள் நினைவுகள் எம்மைவிட்டுப் பிரியாது.

இணுவில் மேற்கு,
இணுவில். (82500) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி ஞானமூர்த்தி

[முன்னாள்அலுவலர், பெருந்தெருக்கள் திணைக்களம், உதவி ஆசிரியர், வீரகேசரி]



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானமூர்த்தி (07.02.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் க.சின்னத்தம்பி மற்றும் ஞானபூசணம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் கணேசமூர்த்தி (உப அதிபர், யா/கோண்டாவில் பரஞ்சோதி மகாவித்தியாலயம்), கருணாமூர்த்தி (விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை), புவனேசமூர்த்தி (நிர்வாக உத்தியோகத்தர், பனை அபிவிருத்திச்சபை), ஜெயபாலமூர்த்தி (பிரதிப்பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், கொழும்புத் தலைமையகம்), சத்தியமூர்த்தி (பிரான்ஸ்), சிவமூர்த்தி (ஆசிரியர், யா/விவேகானந்தா வித்தியாசாலை, மானிப்பாய்), தேவகுமாரி, யோகேஸ்வரி (ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி), ஞானகௌரி (ஆசிரியை, கோகுலம் அறநெறிப் பாட சாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ந.குலேந்திரராசா (முன்னாள் உத்தியோகத்தர், வடிசாலைகள் திணைக்களம்), ப.சிவலோகநாதன் (உப அதிபர், சித்தங்கேணி பிளவத்தை அ.மி.த. க. பாடசாலை), க.ஆனந்தராணி, வைத்திய கலாநிதி க.இராஜேஸ்வரி (யாழ்.போதனா வைத்தியசாலை), பு.யமுனா (இலிகிதர், பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்), ச.விக்கினேஸ்வரி (பிரான்ஸ்), சி.லீலாவதி ஆகியோரின் மைத்துனரும் ஆதித்தியா, ஆதிரன், சனாதனி, யோதினி, மைதிலி, சாலினி, பிரணவன், சிந்து, கீதன், தெய்வீகன், ரிசிகேசன், திவ்வியன் ஆகியோரின் பெரியதந்தையும் தர்சிகாவின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2009) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ஞானபதி", தகவல்:
இணுவில் மேற்கு, இணுவில். (சி/557090) சி.கணேசமூர்த்தி.

## தென்மராட்சி மக்களை ஓய்வூதியத் திட்டத்தில் இணைக்கும் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.9

சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதியத் திட்டத்தில் தென்மராட்சி பிரதேச மக்களை இணைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரதேசத்தில் உள்ள சுயதொழில் புரியும் 18 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் இத் திட்டத் தில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த வருடம் இத்திட்டத்தில் ஆயிரத்து 329 பேர் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இத்திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்புவோர் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (202-207)

## தென்மராட்சியில் விபத்துக்களில் நால்வர் காயம்

யாழ்ப்பாணம்,பெப்.9

மீசாலையில் இடம்பெற்ற மினிபஸ் மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் கடந்த சனிக்கிழமை படுகாயமடைந்தனர்.

திருமண நிகழ்வினை வீடியோ எடுப்பதற்காகச் சென்ற வேளையில் விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

நல்லூரைச் சேர்ந்த வல்லிபுரம் நரேந்திரன்(வயது 38), இராமலிங்கம் ரமேஸ்குமார் (வயது 30) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதேவேளை-சாவகச்சேரிப் பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற வெவ்வேறு வீதி விபத்துக்களில் சிக்கி இருவர் காயமடைந்தனர்.

மீசாலை டச்சு வீதியில் ஒன்றுடன் ஒன்று கடியுண்ட மூன்று நாய்கள் மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த ஆசிரியர் நாகலிங்கம் ஜெனனகுமார்(வயது 34) என்பவருக்கு கால் முறிந்தது.

இதேவேளை - சாவகச்சேரி, டச்சு வீதியில் வீதியோரத்தில் மாடு கட்டியிருந்த கல்லின் மீது மோட்டார் சைக்கிள் சில்லு ஏறியதில் தூக்கி வீசப்பட்டு மீசாலையைச் சேர்ந்த கி.ஜெகத்(வயது 18) என்பவர் காலில் காயமடைந்தார்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். நா.ஜெனனகுமார் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (203-207)


### காணி விற்பனைக்குண்டு

மல்லாகத்தில் 3 பரப்பு பனைகள் உள்ள, வீடு கட்ட உகந்த காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு: 021 222 3147

### சிட்டை எழுதுனர் Bill clerk தேவை

சிட்டை எழுதுனர் (பெண் - Bill clerk) தேவை. விருப்பமுள்ளவர்கள் நேரில் வரவும்.

[illegible],
பலாலி வீதி, திருநெல்வேலி.

### Maruthi Car For Sale

Doctor's use Maruthi 800cc car mint condition; J series (Run 24000km), Fixed prize 1050000.00 (0ne million & fifty thousand) S.Ramalingam, Navalar madam school view, point Pedro, Main road navalar madam, Karaveddy. Inspect only sat,. sunday and public Holidays.

T.P. 0718175819.

### ELECTRONIC REPAIRS

HOT LINE 021 222 5893

Analog & Digital Monitors
Inkjet / Laser / Dot matrix Printers
Power Supply
Scanners
Laptop & Mobile PCs
UPS
VCD/DVD players
Hi-fi systems

And all electronic Equipments

MICRO PC SYSTEMS

Nelliady Kodikamam Road, Nelliady, T.P - 0773039536


## சுழிபுரம் பிரதேசத்தில் அறுவடையும் உழவும்

சுழிபுரம், பெப்.9

சுழிபுரம் பிரதேசத்தில் நெல் அறுவடையும் உழவு வேலையும் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

சில வயல்களில் 'நிஷா' புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட நெற்கதிர் கள் அறுவடை செய்யப்பட்டு மாடுகளுக்கு உணவுக்காக எடுத்துச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. (202-28)



கீரிமலை
ஸ்ரீநகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரசுவாமி திருக்கோயில்
சர்வதாரி வருஷ
மகோற்சவ கால வழிபாடும் சிவராத்திரி விழாவும்

**10.02.2009 தொடக்கம் 24.02.2009 வரை**

(சர்வதாரி வருஷம் தை மாதம் 28ஆம் நாள் செவ்வாய்க்கிழமை முதல் மாசி 12 செவ்வாய்க்கிழமை வரை)

தினமும் விசேட ஹோமத்துடன் கூடிய அபிஷேக பூஜை வழிபாடுகளும் மகாசிவராத்திரியன்று விசேட ஹோமத்துடன் நான்கு சாமமும் விசேட அபிஷேகமும் பக்தி பூர்வமான நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

மகாசிவராத்திரியன்று
- ★ மூதாதையர்களின் ஆத்ம சாந்திக்காகவும்
- ★ சகல தோஷங்கள் நிவர்த்திக்காகவும்
- ★ தங்கள் தங்கள் இஷ்ட காரியங்கள் நிறைவேற வேண்டியும்
- ★ லக்ஷ்மி கடாட்சம் பெறவும்

நகுலேஸ்வர ஆலயத்தில் சுத்தமான பசு நெய்த் தீபம் ஏற்றி தங்கள் தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றி எம்பெருமானின் பூரண கடாக்ஷத்தை பெற்றுய்வீர்களாக.

தீர்த்தக் கரையில் மறைந்தோர்க்கு விசேட ஆத்மசாந்திக் கிரியைகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

தினமும் சேந்தான்குளம் ஊடாக காலை 8 மணி தொடக்கம் சோதனைச் சாவடியிலிருந்து வ.போ.ச.பஸ் வசதி செய்யப்பட்டுள்ளது. 23, 24.02.2009 பக்தர்கள் இரு சோதனைச் சாவடிகள் ஊடாக வர ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

தினமும் மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"


குறிப்பு: நெய்த்தீபமும், அர்ச்சனைப் பொருள்களும் ஆலய முன்றிலில் பெற்றுக்கொள்ளலாம்.

தற்போதைய முகவரி:
சேந்தாங்குளம் வீதி,
இளவாலை வடக்கு, இளவாலை.
தொ.பே: 0602212440.

இறைபணியில்
"நகுலேஸ்வரானுக்கிரக வித்தியாதரர்"
ராஜராஜ ஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள்
(ஆதீன கர்த்தாவும் பிரதம குருவும்).

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலராக 12 . 06 . 1974



சருகாக 22 . 01 . 2008

அமரர் செல்வராசா துளசிதாசன்
(THULSI CABLE T.V உரிமையாளர்)
திதி: பூரணை (09.02.2009)

ஆலமரம் போல வாழுவீரென்று இருக்க
பாதியிலே எம்மை விட்டு பரமனடி சேர்ந்தாயே!
ஏழேழு ஜென்மமும் உம்மையே
உறவாய் கேட்கின்றோம்....!

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி. (82534) குடும்பத்தினர்.

## கண்ணீர்க் காணிக்கை



அமரர் K.S.ஞானமூர்த்தி (ஞானி)
(இணுவில் மேற்கு, இணுவில்)
[முன்னாள்அலுவலர், பெருந்தெருக்கள் திணைக்களம், முன்னாள் உதவி ஆசிரியர், வீரகேசரி]

"உயிருள்ளவரை எம்மை அன்பு செய்தாய்
எம் உயிருள்ளவரை உமை மறவோம்"

ஆருயிர் அன்பே ஞானி ஆறுமா உன் பிரிவின் சோகம்
ஞானி வரும் காட்சியும், ஞானியின் இதழ்ச் சிரிப்பும்
நட்பும், ஊறிடும் ஊற்றைப் போல ஓயாத எங்கள் நெஞ்சை
கூறிடும் ஆயுதம் போல குற்றிவிட்டுச் சென்றாய் ஞானி!

உற்றார், சுற்றத்தார் சுகத்தை வேண்டியும் நினைவில்
நித்தமும் நினைத்தாய் செயலும் பட்டாய் ஆனால்
சுற்றமும் சூழலில்லா வேளை நீதான் ஏனோ மண்ணில்
சத்தமே இன்றி தனிக்கவிட்டு எம்மை சென்றாய் ஞானி

அன்பெனும் சிறகுக்குள் எமை அரவணைத்த
பண்பெனும் பாதையில் வழி நடத்திய ஞானியே!
நொடித்த உன் வாழ்வை எண்ணி கண்ணீரை
பூக்களாக்கி காணிக்கை செய்கின்றோம்.

அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

T.அஜந்தன் (கொழும்பு),
A.அனுஷா (Holland).
T.சாரதா (கொழும்பு),
T.பிரசாத் (கொழும்பு).

(சி/557086)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடகஸ்காரில் ஆர்ப்பாட்டப் பேரணி மீது துப்பாக்கிப் பிரயோகம்; 23 பேர் பலி!

அன்டானன் அரிவோ, பெப்.9

உலகின் நான்காவது மிகப் பெரிய தீவான மடகஸ்காரின் தலைநகரில் எதிரணியினரின் ஆர்ப்பாட்டப் பேரணியை நோக்கி பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 23 பேர் கொல்லப்பட்டனர். பெருந்தொகையானோர் காயமடைந்தனர் என ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



பதவி நீக்கம் செய்யப்பட்ட அன்டானன் அரிவோ நகரபிதா அன்ரி ரஜோலினாவுக்கும், ஜனாதிபதி ரவலோ மனானாவுக்குமிடையே மடகஸ்காரில் அதிகாரப் போட்டி உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. முன்னாள் நகரபிதாவின் தலைமையில் செயற்படும் எதிரணியே ஆர்ப்பாட்டப் பேரணியை மேற்கொண்டது.

''ஜனாதிபதி ரவலோ மனானா பொது மக்களின் நிதியை துஷ்பிரயோகம் செய்கிறார். அத்துடன் ஒரு சர்வாதிகாரியாகச் செயற்படுகிறார். இதனை அனுமதிக்க முடியாது'' என முன்னாள் நகரபிதா குற்றஞ்சாட்டி வருகிறார். இவரது ஆதரவாளர்களின் பேரணி ஜனாதிபதி மாளிகையை நோக்கிச் செல்லும்போது, கலகம் அடக்கும் பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்கானது.

சம்பவம் நிகழ்ந்த இடத்திலிருந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர், ''துப்பாக்கிச் சூட்டுக்கு 25 பேர் வரை பலியாகியுள்ளனர்'' என ரொய்ட்டருக்குத் தெரிவித்தார். எனினும், இவர் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ள முன்வரவில்லை. பெருந்தொகையானோர் காயமடைந்தனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து, முன்னாள் நகரபிதா ரஜோலினா தாம் நிகழ்த்திய தனியார் வானொலி உரையில் ஜனாதிபதியை வெகுவாகக் கண்டித்தார். ''பேரணியினர் ஆயுததாரிகள் அல்லர். அவர்களிடம் ஆயுதங்கள் இருக்கவில்லை. ஆனால், மனோதிடம் மாத்திரமே இருந்தது'' என அவர் குறிப்பிட்டார்.

ரஜோலினா கடந்த செவ்வாய்க்கிழமை நகரபிதா பதவியிலிருந்து அரசால் நீக்கப்பட்டு, அவருக்குப் பதிலாக ஹை ரன்ரியன ரிஸோவா புதிய நகரபிதாவாக நியமிக்கப்பட்டார் என உள்ளூர் நகர அதிகாரியொருவர் தெரிவித்தார்.

உலகிலுள்ள மிகப் பெரிய தீவுகளில் மடகஸ்கார் நான்காவது இடத்தை வகிக்கின்றது. இது பிரசித்திபெற்ற சுற்றுலா மையமாகத் திகழ்கிறது. இது எண்ணெய் வளம், தங்கம், நிக்கல், யுரேனியம், வெள்ளி கனி வளங்கள் ஆகியவற்றைக் கொண்ட செழிப்பான தீவாகும்.

## போலந்து பொறியியலாளர் பாகிஸ்தானில் படுகொலை

க்ராச்சி, பெப்.9

பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளால் பிணைக் கைதியாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்த போலந்து பொறியியலாளர் பீட்டர் ஸ்டான்சக் படுகொலை செய்யப்பட்டார்.

பாகிஸ்தானின் வட-மேற்கு எல்லைப்புற மாகாணம் தலிபான் தீவிரவாதிகளின் ஆதிக்கத்தில் இருந்து வருகிறது. கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் போலந்தைச் சேர்ந்த பொறியியலாளர் பீட்டர் ஸ்டான்சக், தீவிரவாதிகளால் கடத்தப்பட்டார். அவரை விடுவிக்க சிறையிலுள்ள தீவிரவாதிகளை விடுதலை செய்யவேண்டும் என்று தீவிரவாதிகள் கோரி வந்தனர்.

அமெரிக்க பத்திரிகையாளர் டேனியல் பியர்ல் படுகொலைக்கு காரணமான ஷேக் என்பவர் உட்பட சில தீவிரவாதிகளை விடுதலை செய்யவேண்டும் என்று அவர்கள் கோரி வந்தனர்.

ஷேக் காந்தகர் விமான கடத்தலின் போது கைது செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த கோரிக்கையை பாகிஸ்தான் அரசு ஏற்காததால், பொறியியலாளரை தாங்கள் தாக்கி, வெட்டிக் கொலை செய்துவிட்டனர் என தலிபான் தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர்.

## காஸாவில் அமைதி ஏற்பட எகிப்து தொடர்ந்து முயற்சி

காஸா பகுதியில் அமைதி ஏற்படுவதற்காக எகிப்து புதிய யோசனையொன்றை முன்வைத்துள்ளது.

ஹமாஸ் தீவிரவாத இயக்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள காஸா பகுதியில் இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட பின்னரும் தீவிரவாதிகள் ஏவுகணைக் தாக்குதல் நடத்தி வருகிறார்கள். அதனால் பதில் தாக்குதல் தொடர்கிறது என இஸ்ரேல் காரணம் கூறுகிறது.

இந்த நிலையில், இந்தப் பகுதியில் அமைதி ஏற்படுவதற்காக எகிப்து சமரச முயற்சியை மேற்கொண்டுள்ளது. எகிப்து அமைதிக்காக புதிய யோசனை ஒன்றை தெரி வித்துள்ளது.

ஹமாஸுக்கும் இஸ்ரேலுக்குமிடையிலான போர் நிறுத்தம் நீடிக்கப்படவேண்டும் என்றும், கைதிகள் பரிவர்த்தனைக்கு வழி செய்யப்படவேண்டும் என்றும் எகிப்து தெரிவித்துள்ளது.

# சோமாலிய ஜனாதிபதியின் மாளிகை மீது தீவிரவாதிகள் மோட்டார் தாக்குதல்

மொகடிஷு, பெப். 9

சோமாலியாவின் புதிய ஜனாதிபதி ஷேக் ஷரீப் அஹ்மத் சனிக்கிழமை தமது உத்தியோகபூர்வ ஜனாதிபதி மாளிகையைச் சென்றடைந்த சிறிது நேரத்தில் தீவிரவாதிகள் அதன் மீது றொக்கெட் தாக்கதல்களை மேற்கொண்டனர். அதற்கு சற்று முன்னர் வழி நெடுக மக்கள் திரண்டு நின்று புதிய ஜனாதிபதியை கரகோஷம் செய்து, வெகு உற்சாகமாக வரவேற்றார்கள்.



அதிகாரப் போட்டியை அடுத்து, கடந்த டிசெம்பரில் அப்போதைய ஜனாதிபதி அப்துல்லாஹி யூசுப் தமது பதவியைத் துறந்தார். அதனால், ஜனவரி 31 ஆம் திகதி இடம்பெற்ற எம்.பிக்களின் விசேட கூட்டத்தில் புதிய ஜனாதிபதியாக ஷேக் ஷரீப் தெரிவு செய்யப்பட்டார்.

புதிய ஜனாதிபதி, ஜனாதிபதி மாளிகையை வந்தடைந்த பின்னர், அப்பகுதியில் தீவிரவாதிகள் மோட்டார் தாக்குதல்களை மேற்கொண்டார்கள். எனினும், சேத விவரங்கள் உடனடியாக வெளியாகவில்லை என அரச அதிகாரியொருவர் பி.பி.ஸி. செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

1991 ஆம் ஆண்டு முதல் சோமாலியாவில் சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்துள்ளன. நாடு பல்வேறு பாகங்களாகத் துண்டாடப்பட்டு, பத்துக்கு மேற்பட்ட எதிரும் புதிருமான இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. தலைநகரான மொகடிஷுவில் ஒரு குறிப்பிட்ட சில பகுதிகள் மாத்திரம் அரச படைகளால் மீட்கப்பட்டுள்ளன.

சோமாலியாவில் ஐக்கிய அரசொன்றை நிறுவுவதற்கும், சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை மீள நிலைநாட்டுவதற்கும், ஐ.நாவின் மத்தியஸ்த திட்டத்துக்கிணங்க புதிய ஜனாதிபதியாக எம்.பிக்களால் ஷேக் ஷரீப் அஹ்மத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஏறத்தாழ 20 வருடங்களாக சோமாலியாவில் ஒரு மத்திய அரசு கிடையாது. தீவிரவாதக் குழுக்கள், நில பிரபுத்துவ வாதிகளின் ஆயுதக் குழுக்கள் இவற்றுக்கு எதிரான தேசிய படைகள் ஆகியவற்றிற்கிடையே மூண்டுவந்துள்ள மோதல்களில் பல்லாயிரக்கணக்கானோர் பலியாகியுள்ளனர்.

எம்.பிக்கள் சகிதம், தலைநகரான மொகடிஷுவை வந்தடைந்த புதிய ஜனாதிபதி செய்தியாளர் மாநாடொன்றில் பேசுகையில், ''முதிய தலைவர்கள், அரசியல்வாதிகள், பல்வேறு தீவிரவாதக் குழுக்களைச் சேர்ந்தோர் ஆகியோருடன் நான் கலந்தாலோசனை நடத்தி, ஐக்கிய அரசொன்றை நிறுவுவேன்'' என்றார்.

# ஆஸ்திரேலியாவில் காட்டுத் தீ; இதுவரை 35 பேர் உயிரிழப்பு



விக்டோரியா, பெப். 09

ஆவுஸ்திரேலியாவின் விக்ரோரியா மாநிலத்தில் தீவிரமாகப் பரவிக்கொண்டிருக்கும் காட்டுத் தீக்கு இதுவரை 35 பேர் பலியாகியுள்ளனர். என தீயைக் கட்டுப்படுத்துவதில் பகீரதப் பிரயத்தனமெடுத்து வரும் தீயணைப்புப் படையின் அதிகாரி பி.பி.ஸி. செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

காட்டுத் தீ பல கோணங்களில் பரவிக் கொண்டிருக்கிறது. இதனைக் கட்டுப்படுத்தும் பணியில், 30 ஆயிரம் தீயணைப்புப் படைவீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். இதுவரை 35 பேரின் மரணம் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை உயர்வடையலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

''தீயைக் கட்டுப்படுத்த மத்திய சமஷ்டி அரசும், துருப்புகளை அனுப்ப முன்வந்துள்ளது. இதனைப் பெரிதும் நான் வரவேற்றுள்ளேன். கடுங் காற்றால், அசுரவேகத்தில் காட்டுத் தீ பரவிக் கொண்டிருக்கிறது. காடுகளை ஒட்டிய பிராந்திய குடியிருப்பாளர்களும் வெளியேற்றப்பட்டுள்ளார்கள்'' என விக்டோரிய மாநில முதலமைச்சர் ஜோன் புரும்பி தெரிவித்தார்.

''வெப்ப காலநிலையாலும், வீறு படைத்த காற்றாலும், வனாந்தரப் பிராந்தியங்களையொட்டிய அநேக நகரங்களும் தீக்கு இரையாகிவிட்டன. மாநில வரலாற்றிலேயே தற்போதுதான் இத்தகைய உக்கிரமான தீ ஏற்பட்டுள்ளது'' என அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

''தீச்சுவாலைகள் பெரும் மதில்களைப் போல எழுகின்றன. மரங்கள் தீயில் வெடிக்கின்றன. வான்பரப்பில் சாம்பல் பறக்கின்றது. காட்டுத் தீக்கு 30 ஆயிரம் ஹெக்டர் (115 சதுர மைல்) காடுகள், பயிர் நிலங்கள், நகரங்கள் ஆகியவை இரையாகியுள்ளன'' என நேரில் கண்டவர்கள் விவரித்தார்கள்.

# அமேசன் பகுதியில் விமான விபத்து நால்வர் மீட்பு; 20 பேர் மாயம்

பிரேசிலியா, பெப். 09

''சிறிய விமானமொன்று சனிக்கிழமை அமேசன் வனாந்தரப் பிராந்தியத்திலுள்ள நதியொன்றில் விழுந்து விபத்துக்குள்ளானது. இதில் பயணித்த 24 பேரில் நான்கு பேர் மீட்கப்பட்டனர். 20 பேர் காணாமற்போய்விட்டனர்'' என விமானச் சேவை அதிகாரிகளும், மீட்புப் பணியாளர்களும் ரொய்ட்டர் செய்திச் சேவைக்குத் தெரிவித்தனர்.

''பெண்டிரன்டஸ் என்னும் இச்சொகுசு விமானத்தின் சிதைவுகள் மனாகப்புறு நதியில் கண்டுபிடிக்கப்பட்டன. அமேசன் மாநிலத்தின் தலைநகரான மனஸிலிருந்து 120 கிலோ மீற்றர் (74 மைல்) தொலைவில் இந்த இடம் அமைந்துள்ளது'' என விமானப் படை அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

''இந்த விமானம் கோரி நகரிலிருந்து புறப்பட்டது. காலநிலை சீர்கேட்டால், விமானம் திருப்பப்படுமென விமானிகள் விமானக் கட்டுப்பாட்டு நிலையத்துக்கு அறிவித்துள்ளார்கள். இதையடுத்து, தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது'' என்றும் அவர் விவரித்தார்.

''இந்த விமானத்தில் 22 பயணிகளும், இரு விமானிகளும் இருந்தார்கள். காணாமற்போனோரில் நான்கு குழந்தைகளுமடங்குவர். பெருக்கெடுத்து விரையும் நதிக்குள் மூழ்கி பெரும்பாலானோர் மரணித்திருப்பர் என அஞ்சப்படுகிறது'' என பிராந்திய மனஸ் விமானச் சேவைப் பேச்சாளர் போலோ ரொபர்ட்டோ பெரைரா தெரிவித்தார்.

# பாக். சோதனைச் சாவடி மீது தாக்குதல் ஏழு பொலிஸார் உயிரிழப்பு

இஸ்லாமாபாத், பெப்.9

பாகிஸ்தானிலுள்ள மியான்வாலி என்னுமிடத்திலுள்ள சோதனைச் சாவடியொன்றின் மீது தீவிரவாதிகள் மேற்கொண்ட கடும் தாக்குதலில் ஏழு பொலிஸார் உயிரிழந்தனர். வட-மேற்கு முனை மாகாணத்துக்கருகிலுள்ள பஞ்சாப்பில் இந்த இடம் அமைந்துள்ளது என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

''இச்சோதனைச் சாவடி கட்டடத்தின் மீது, விடிவதற்குள் தாக்குதல் நடத்தப்பட்டது. துப்பாக்கி வேட்டுச் சத்தம் தொடர்ந்து ஒலித்தது. குண்டொன்று வெடித்த ஓசையும் கேட்டது'' என நகர குடியிருப்பாளர்கள் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்கள்.

''ஏழு பொலிஸாரில் இருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகியுள்ளனர். மற்றும் ஐவர் குண்டுத் தாக்குதலில் மரணித்துள்ளனர். மூவர் படுகாயமடைந்துள்ளனர். சோதனைச் சாவடியின் ஒரு பகுதி தகர்க்கப்பட்டுள்ளது'' என பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# முன்னாள் தாய். பிரதமர் ஜப்பான் வரத் தடை

பாங்கொக், பெப். 09

பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் தாய்லாந்து பிரதமர் தக்ஷின் ஷினவத்ர ஜப்பானில் நுழைவதற்கு அந்நாடு தடை விதித்துள்ளது.

தாய்லாந்து பிரதமர் அபிஷித் வெஜ்ஜிவா,தாம் மூன்று நாள் ஜப்பான் விஜயத்தை வியாழக்கிழமை மேற்கொள்வதாக முன்னர் நிருபர்களிடம் இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்த 2001 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஷினவத்ர, 2006 ஆம் ஆண்டு இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டார். பின்னர் வெளிநாட்டில் தஞ்சம் புகுந்தார். மீண்டும் 2008 இல் நாடு திரும்பி ஆட்சியைக் கைப்பற்றினார்.

எனினும், அவர் மீதான ஊழல் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பான வழக்கில் தாய்லாந்து நீதிமன்றம் அவருக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கியது. மேலும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் 5 ஆண்டுகளுக்கு தடை விதித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர் பிரச்சினையில் தினமும் ஒன்று பேசி மற்றவர்களையும் குழப்பி வருகிறார் கருணாநிதி!

## டாக்டர் ராமதாஸ் கடும் சீற்றம்

சென்னை, பெப்.9

ஈழத் தமிழர் பிரச்சினையில் முதல்வர் கருணாநிதி, தானும் குழம்பி மற்றவர்களையும் குழப்பி வருகிறார். அவருக்கு ஆட்சி போய்விடும் என்று பயம் வந்துவிட்டது. அதனால்தான் மத்திய - மாநில அரசுகளுக்கு இடையே மோதலை உண்டாக்கி ஆதாயமடையப் பார்க்கிறேன் என்று என் மீது குற்றஞ்சாட்டியுள்ளார். - என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் கடும் சீற்றம் வெளியிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் சென்னையில் நேற்றுமுன்தினம் நடந்த கறுப்புக் கொடி ஊர்வலத்தில் பங்கேற்றுப் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.



மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

இலங்கைப் பிரச்சினையில் கருணாநிதி தானும் குழம்பி மற்றவர்களையும் குழப்பி வருகிறார். தினமும் ஒன்று பேசுகிறார்.

இலங்கைப் பிரச்சினையில் நாங்கள் 'பாவ்லா' காட்டுகிறோம் எனத் தி.மு.க. செயற்குழுவில் கருணாநிதி பேசியுள்ளார். அவருக்கு ஆட்சி போய்விடும் என்று பயம் வந்துவிட்டது. அதனால்தான் மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே மோதலை உண்டாக்கி ஆதாயமடையப் பார்க்கிறேன் என்று என் மீது குற்றம் சாட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் 'ஒரு கட்சி ஆட்சி முறை' என்று 1986இல் கூறியதை, 'சர்வாதிகார ஆட்சி' என்று சொன்னார் என பிரபாகரனை கருணாநிதி கொச்சைப்படுத்தியுள்ளார். இது பிரச்சினையைத் திசை திருப்பும் முயற்சியாகும்.

இலங்கைப் பிரச்சினையில் எம்.ஜி.ஆர். பின்பற்றிய வழிமுறை களைப் பின்பற்றுமாறு அ.தி.மு.கவின ருக்கு கருணாநிதி அறிவுரை வழங்கியுள் ளார். 'சார்க்' மாநாட்டின்போது ஈழப் போரா ளிகளிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களை மீண்டும் ஒப்படைக்கச் சொன்னவர் எம்.ஜி.ஆர். ஆனால் இலங்கைக்கு அனுப்பிய 'பால்ரஸ்' உருளைகளைக்கூட ஆயுதங்கள் என்று கூறி நடவடிக்கை எடுத்தவர் கருணாநிதி. எம்.ஜி.ஆரின் வழிமுறைகளை முதலில் அவர்தான் பின்பற்ற வேண்டும்.

பழிபோடுவதிலும், பழிவாங்குவதிலும் கருணாநிதிக்கு நிகர் கருணாநிதிதான். அதனால்தான் எங்கள் மீது பழி சுமத்திவருகிறார்.

ஆயிரம் ராஜபக்ஷக்கள் வந்தாலும் விடுதலைப் புலிகளை வெல்ல முடியாது. இலங்கைப் பிரச்சினை பற்றி கனடா நாடாளுமன்றத்தில் 5 மணி நேரமும், இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் 30 நிமிடங்களும் விவாதம் நடந்துள்ளது.

எதிர்வரும் 12ஆம் திகதி தொடங்கவுள்ள நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் பா.ம.க., ம.தி.மு.க., இந்தியக் கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகளின் எம்.பி.க்கள் இலங்கைப் பிரச்சினையை எழுப்புவார்கள்.

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகள் இணைய வேண்டும் - என்றார்.

# பற்றி எரிகின்ற ஈழத் தமிழர் பிரச்சினையில் கலைஞரின் வேண்டுகோளால் பயனில்லை

## விஜயகாந்த் குற்றச்சாட்டு



சென்னை, பெப். 09

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்ற முதல்வர் கருணாநிதியின் வேண்டுகோளால் எந்தப் பயனுமில்லை - என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு -

தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியும், அ.தி.மு.க.வும், தி.மு.கவும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை எதிர்க்கின்றன எனவும், ஆனால் இலங்கைத் தமிழர்களை ஆதரிக்கின்றன எனவும் கூறி ஒரே நிலையை எடுத்துள்ளன. இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகள் வேறு, பொதுமக்கள் வேறு என்று பிரிக்க முடியாது.

இராணுவ நடவடிக்கையின் மூலம் பொதுமக்கள் கட்டாயம் பாதிக்கப்படுவார்கள். பெரிய கட்சிகள் தங்கள் பக்கம் இருக்கின்றன என்பதால் இந்திய அரசு நிம்மதியாக இருக்கிறது.

இந்தப் பிரச்சினை பூதாகாரமாக வெடித்தும் கூட, இந்திய அரசில் பங்கு வகிக்கின்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த எந்தக் கட்சியும் பதவி விலகத் தயாராக இல்லை.

இந்திய அரசு தமிழ் மக்களைப் புறக்கணிக்கின்றபோது, தமிழ் மக்கள் ஏன் இந்திய அரசைப் புறக்கணிக்கக் கூடாது. அதற்குள்ள ஒரே வழி வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல்களை தமிழ் நாடே புறக்கணிப்பதுதான். இதன்மூலம் தமிழ்நாட்டுமக்களும் தங்களது உணர்வைப் பதிவு செய்ய முடியும்.

தேர்தல் புறக்கணிப்பு இப்போதே அறிவிக்கப்பட்டால், இந்திய அரசு எப்படியும் தமிழர்களின் குறையைத்தீர்க்க கட்டாயம் முன்வரும்.

இலங்கையில் உரிமைகளுக்காகத் தமிழர்கள் உயிரைத் துறக்கிறார்கள். ஆனால், இங்குள்ளவர்கள் பதவியைக் கூட விடத் தயாராக இல்லை என்ற பழியிலிருந்து மீள்வதற்கு இது வழிவகுக்கும்.

ஆகவே, தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் தங்கள் பதவிகளைப் பெரிதாகக் கருதவில்லை என்று எடுத்துக் காட்டும் வகையிலும், உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் வரும் நாடாளுமன்றத் தேர்தலைப் புறக்கணிப்போம். வெறுமனே அனைத்துத் தரப்பினரும் ஒன்றுபடுங்கள் என்று முதல்வர் கருணாநிதி விடுத்திருக்கின்ற வேண்டுகோளால் பயனில்லை - என்றுள்ளது.

# இலங்கைத் தமிழரின் பாதுகாப்பை இந்தியா உறுதி செய்ய வேண்டும்!

## பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத் சிங் வலியுறுத்து



நாகபுரி, பெப். 9

இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டும் - என்று பிரதான எதிர்க்கட்சியான பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

நாகபுரியில் கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கிய பா.ஜ.க. தேசிய கவுன்சில் கூட்டத்தின் தொடக்க நிகழ்ச்சியில் பேசிய போதே அவர் இதைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கையில் இராணுவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சிக்கியுள்ள தமிழர்களின் பாதுகாப்பை இந்தியா உறுதிப்படுத்த வேண்டும்.

இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண 1987இல் ஏற்படுத்தப்பட்ட ராஜீவ்- ஜெயவர்த்தன ஒப்பந்தத்தை அமுல்படுத்த வேண்டும்.

போர் இறுதிக் கட்டத்துக்கு வந்துவிட்டது என இலங்கை கூறுகிறது. இதன் தாக்கம் இந்தியாவில் இருக்கும்.

இராணுவத்தின் மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது. புதியதொரு தீர்வைக் காண இலங்கை அரசு முன்வர வேண்டும் - என்றார்.

# போர் நிறுத்தம் கோரி முஸ்லிம் முன்னேற்றக் கழகம் தீர்மானம்

தாம்பரம், பெப்.9

தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் சார்பில் தொடங்கப்பட்டுள்ள மனித நேய மக்கள் கட்சி, இலங்கையில் உடனடிப் போர் நிறுத்தம் செய்யக்கோரி தீர்மானம் நிறைவேற்றியது.

தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம், மனித நேய மக்கள் கட்சி என்னும் அரசியல் கட்சியை தொடங்கியுள்ளது. இதன் தொடக்கவிழா மாநாடு சென்னையை அடுத்த தாம்பரத்தில் நேற்றுமுன்தினம் நடந்தது.

மாநாட்டில் கலந்து கொள்ள தமிழகம் முழுவதும் இருந்து ஏராளமான பஸ், வான், கார்களில் ஆயிரக்கணக்கில் த.மு.மு.கவினர் திரண்டு வந்திருந்தனர். நூற்றுக் கணக்கான முஸ்லிம் பெண்களும் தங்களது குழந்தைகளுடன் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

மனித நேய மக்கள் கட்சி தொடக்க விழாவில் இலங்கையில் உடனடியாகப் போரை நிறுத்த இந்தியா முயற்சிக்க வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# செத்துமடியும் இலங்கைத் தமிழருக்காக ஜெயலலிதாவின் பிறந்தநாள் விழா ரத்து

சென்னை, பெப். 9

இலங்கையில் தமிழர்கள் மடிந்து கொண்டிருக்கின்ற இந்தக் காலகட்டத்தில் தனது பிறந்தநாளைக் கொண்டாடப் போவதில்லை என்று அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா கூறியிருக்கிறார்.

விடுதலைப் புலிகளுக்கு ஒருபோதும் ஆதரவில்லை என்று கூறியுள்ள அவர், இலங்கைத் தமிழர்களை பாதுகாக்க மத்திய அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் முழு ஒத்துழைப்பு அளிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

கடந்த ஆறு மாத காலமாக இலங்கையில் வாழும் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டு வருவதை தமிழக மக்கள் நன்கு அறிவர்.

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்படுவதற்குரிய எந்த நடவடிக்கையையும் முதலமைச்சர் கருணாநிதி மனதார எடுக்கவில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை. இதன் விளைவாக இலங்கைத் தமிழர்களின் உயிரிழப்பு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே' என்ற தலைப்பில் எழுதியுள்ள கடிதத்தில், இலங்கைத் தமிழர்களின் உரிமைகளையும், உயிர்களையும் பாதுகாப்பதில் ஒன்றாக இருப்போம் என்று அழைப்பு விடுக்கிறார்.

தமிழர்களைப் படுகொலை செய்யும் விடுதலைப் புலிகள் அமைப்பை அ.தி.மு.க. ஒருபோதும் ஆதரிக்காது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் கருணாநிதியின் நிலைப்பாடு என்ன என்பதை அவர் தெளிவுபடுத்த வேண்டும்.

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்பதிலும், இலங்கை இராணுவத்தால் இலங்கைத் தமிழர்கள் கொன்று குவிக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்பதிலும் அ.தி.மு.கவுக்கு எந்தவிதமான மாற்றுக் கருத்தும் கிடையாது. இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்படுவதற்காகவும், இலங்கைத் தமிழர்களின் உரிமைகளையும், உயிர்களையும் பாதுகாப்பதற்காகவும் மத்திய அரசால் எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் அ.தி.மு.க. முழு ஒத்துழைப்பு கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, இலங்கைத் தமிழர்கள் செத்து மடிந்து கொண்டிருக்கின்ற இந்த சோதனையான தருணத்தில் இந்த ஆண்டு எனது பிறந்த நாளை கொண்டாடுவதில்லை என நான் முடிவு செய்துள்ளேன் - என்றுள்ளது.



## இந்தியச் செய்திகள்

# இலங்கை தேசிய தற்காப்புக்கலை அணி சேலத்திலிருந்து திருப்பியனுப்பப்பட்டது

தற்காப்புக் கலைப் போட்டியில் பங்கேற்க சேலம் வந்திருந்த சிங்கள வீரர்களை போட்டியிலிருந்து நீக்க வேண்டும் என்று கோரி இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தினர் ஆர்ப்பாட்டம் செய்தனர். அப்போது இலங்கைத் தேசியக்கொடி எரிக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

சேலம் காந்தி மைதானத்தில் உள்ள உள் விளையாட்டு அரங்கில் நேற்றுமுன் தினம் மாலை கராத்தே, குங்பூ, குத்துச் சண்டை, டேக்குவாண்டோ போன்ற தற்காப்புக் கலைப் போட்டிகள் நடந்தன.

இதில் பங்கேற்க இலங்கையில் இருந்து 6 வீரர்கள், 2 வீராங்கனைகள் மற்றும் ஒரு பயிற்சியாளர் என மொத்தம் 9 சிங்களவர்கள் வந்திருந்தனர். நேற்றுமுன்தினம் மாலை விளையாட்டு போட்டியின் தொடக்க விழாவில் சிங்கள வீரர்கள் தங்கள் நாட்டுத் தேசியக் கொடியை ஏந்தி வந்தனர்.

சேலத்துக்கு சிங்கள வீரர்கள் வந்திருக்கும் செய்தி காட்டுத் தீ போல் பரவியது. இதையடுத்து இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தை சேர்ந்தவர்கள் மைதானத்தின் முன்பு, இலங்கை அரசுக்கு எதிராக கோஷம் போட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

போட்டியிலிருந்து சிங்கள வீரர்களை நீக்க வேண்டும் எனக் கோஷம் எழுப்பினர். இலங்கை வீரர், வீராங்கனைகள் வைத்திருந்த அவர்களது தேசியக் கொடியையும் பறித்து தீவைத்து எரித்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

வீரர்களின் பாதுகாப்புக் கருதி தற்காப்புக் கலைப் போட்டி நிறுத்தப்பட்டது. தகவல் கிடைத்ததும் சேலம் மாநகர துணை கமிஷனர் ஜான்நிக்கல்சன் விரைந்து வந்து அங்கிருந்த இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தினருடன் பேச்சு நடத்தினார்.

இலங்கைச் சிங்கள வீரர்கள் போட்டியிலிருந்து வெளியேற்றப்படுவர் அவர் உறுதியளித்தார். இதையடுத்து சிங்கள வீரர்கள் பாதுகாப்புடன் திருப்பி அனுப்பப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அணிக்கு ஆறுதல் வெற்றி

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான ஐந்தாவதும் இறுதியுமான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணிக்கு ஆறுதல் வெற்றி கிடைத்திருக்கின்றது.

இலங்கைக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ள இந்திய அணி ஐந்து ஒருநாள் போட்டிகள் மற்றும் ஒரு 20 ஓவர் போட்டி ஆகியவற்றில் விளையாடி வருகிறது.

முதலில் நடந்த நான்கு போட்டிகளிலும் வெற்றியீட்டிய இந்திய அணி, ஏற்கனவே தொடரையும் சுவீகரித்து விட்டது.

இந்நிலையில் கொழும்பு பிரேமதாஸ விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற ஐந்தாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றிருக்கின்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய டில்ஷானும் ஜயசூரியாவும் அணிக்கு நல்ல ஆரம்பத்தைக் கொடுத்தனர். எனினும், ஜயசூரியா 37 ஓட்டங்களுடன் இர்பான் பதானின் பந்து வீச்சில் ஆட்டமிழக்க டில்ஷானுடன இணைந்து கொண்ட சங்கக்கார இருவரும் அதிரடியாக ஓட்டங்களைக் குவிக்கத் தொடங்கினர்.


97 ஓட்டங்களைப் பெற்று சதத்தை முன்னோக்கிக் கொண்டிருந்த டில்ஷான் திடீரென எதிர்பாராதவகையில் ரண்அவுட் முறையில் வெளியேறி ஏமாற்றம் அளித்தார்.

சங்கக்காராவும் 87 ஓட்டங்களைக் குவித்தார். கண்டம்பி (26) மஹ்ரூப் (32) துஷார (11) குலசேகர (10) ஆகியோர் தத் தமது பந்துகளுக்கு ஓரளவு ஓட்டங்களை எடுத்துக் கொடுத்தார். அணித் தலைவர் மஹேல ஜயவர்த்தன மாத்திரம் வழக்கம் போலவே வெறும் ஒரு ஓட்டத்தை மாத்திரம் பெற்று வெளியேறினார். கப்புகெதர ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

இறுதியில் 50 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 320 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஆரம்பம் முதலே பெரிதாகச் சோபிக்கவில்லை. அதிரடி வீரர்களான கம்பீர் (13) ஷேவாக் (6) ரெய்னா (0) ஆகியோர் சொற்ப ஓட்டங்களுடன் வெளியேற அடுத்துவந்த யுவராஜ் சிங் சற்று நிதானமாகவும், அதேவேளை தமது வழமையான அதிரடிப்பாணியிலும் ஓட்டங்களைக் குவித்தார்.

73 ஓட்டங்களுடன் அவரை வெளியேற்றினார் முரளிதரன். ஏனைய வீரர்களில் தோனி (53) ஜடேஜா (60) ஆகியோர் மட்டுமே அரைச்சதம் கடந்திருந்தனர். 48.5 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 252 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 68 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இலங்கை அணி சார்பில் குலசேகர, மஹ்ரூப், மெண்டிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

ஆட்ட நாயகனாக சங்கக்காராவும் தொடர் நாயகனாக யுவராஜ் சிங்கும் தெரிவுசெய்யப்பட்டனர்.







# இரண்டாவது இன்னிங்ஸில் 51 ஓட்டங்களுடன் சுருண்டது இங்கிலாந்து அணி

## மேற்கிந்தியாவுக்கு இன்னிங்ஸ் வெற்றி

ஜமைக்கா, பெப்.9

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. முதல் டெஸ்ட் ஜமைக்கா நகரில் நடைபெற்றது.

முதலில் துடுப்பட்டத்தைத் தெரிவு செய்த இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 318 ஓட்டங்களை எடுத்தது. மேற்கிந்தியத் தீவுகள் முதல் இன்னிங்ஸில் 392 ஓட்டங்கள் எடுத்தது. இதனையடுத்து 74 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இங்கிலாந்து அணி 2ஆம் இன்னிங்ஸை ஆரம்பித்தது.

மேற்கிந்தியத் தீவுகள் வீரர்களின் அற்புதமான பந்துவீச்சால் இங்கிலாந்து அணி தடுமாறியது. எவருமே எதிர்பாராத வகையில் இரண்டாவது இன்னிங்ஸ்ஸில் இங்கிலாந்து வீரர்கள் ஒருவர் பின் ஒருவராக அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேறினர்.

இறுதியில் அந்த அணி 51 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. ஐந்து வீரர்கள் ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்டமிழந்தனர். இதன் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி 1 இன்னிங்ஸ் மற்றும் 23 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 4 போட்டிகள் கொண்ட தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீரர் ஆட்டநாயகன் விருதை ஜெரோம் ரெய்லர் தட்டிச் சென்றார்.

இவர் முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.



மும்பையில் நடந்த தனியார் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இந்திய வீரர் ஹர்பஜன் சிறுவர்களுடன் உற்சாகமாக போஸ் கொடுத்தார்.

# 32 ஓட்டங்களால் நியுஸிலாந்தை வெற்றிகொண்டது அவுஸ்திரேலியா

சிட்னி, பெப்.9

அவுஸ்திரேலியாவில் இடம்பெற்று வரும் அவுஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் 3 ஆவது போட்டியில் அவுஸ்திரேலியா 32 ஓட்டங்களால் வெற்றி பெற்றிருக்கிறது.

தொடர்ச்சியாகத் தோல்விகளைச் சந்தித்திருக்கும் அவுஸ்திரேலிய அணி 5 ஒரு நாள் போட்டிகளுக்குப் பிறகு நேற்று வெற்றி பெற்றிருந்துள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து முதல் களத்துடுப்பைத் தேர்ந்தெடுத்தது.

அவுஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 301 ஓட்டங்களைக் குவித்தது. அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ஹாட்டின் மற்றும் மைக்கல் கிளார்க் ஆகியோர் முதலாவது விக்கெட் இணைப்பாட்டமாக 135 ஓட்டங்கள் எடுத்தனர். ஹட்டின் 109 ஓட்டங்களையும் கிளார்க் 64 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். அத்துடன் மைக்கல் ஹசி 51 ஓட்டங்களை எடுத்தார்.

நியூசிலாந்தின் பந்து வீச்சில் பேறின் அதிக பட்சமாக 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். 301 என்ற இலக்குடன் களமிறங்கிய நியூசிலாந்து அணி 47.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 269 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. அணியின் சார்பில் எலியட் 115 ஓட்டங்களையும் புள்டன் 40 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர்.

அவுஸ்திரேலிய பந்து வீச்சில் பிறக்கன், இல்பென்ஹஸ்,கோப்ஸ் ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் நியூசிலாந்து அணி 2:1 என்ற அடிப்படையில் முன்னணி வகிக்கிறது.

# பாகிஸ்தான் விதித்துள்ள தடையால் ஐ.பி.எல். அணிகள் ஏமாற்றம்

கராச்சி பெப்.9

ஐ.பி.எல். போட்டியில் பங்கேற்க பாகிஸ்தான் வீரர்களுக்கு பாக். அரசு தடை விதித்துள்ளதால் அவர்களை ஏலத்தில் எடுக்கக் காத்திருந்த அணி நிர்வாகிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனா.

மும்பையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு தீவிரவாதிகள் நடத்திய திடீர் தாக்குதலில் 200இற்கும் மேற்பட்ட அப்பாவிகள் பலியானார்கள். இந்தச் சம்பவம் உலகம் முழுவதிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த சம்பவம் நிகழ்ந்தபோது, இங்கிலாந்து அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஒரு நாள் தொடரில் விளையாடிக்கொண்டிருந்தது. 5 போட்டிகள் முடிந்த நிலையில் இந்த சம்பவம் நிகழ்ந்ததால் இங்கிலாந்து அணி மீதமுள்ள 2 போட்டிகளை ரத்துச் செய்து விட்டு நாடு திரும்பியது.

இந்திய அணி கடந்த மாதம் பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் செய்யத் திட்டமிடப்பட்டு இருந்தது. இதில் 5 ஒரு நாள் போட்டிகளை மற்றும் 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடத் திட்டமிடப்பட்டது.

ஆனால் மும்பை தாக்குதல் சம்பவத்தின் எதிரொலியாக இரு நாடுகளின் எல்லைப் புறங்களில் படைகள் குவிக்கப்பட்டன. இதனால் பதற்றம் நிலவியதால் இந்தியக் கிரிக்கெட் அணியின் பாகிஸ்தான் பயணத்திற்கு இந்திய அரசு அனுமதியளிக்கவில்லை. இதனால் அந்தப் போட்டித் தொடர் ரத்துச் செய்யப்பட்டது.

இதற்குப் பதிலடியாக பாகிஸ்தான் அரசு, பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் இந்தியன் பிரீமியர் லீக்கில் பங்கேற்கக்கூடாது என்று அவர்களுக்குத் தடை விதித்தது. இது ஐ.பி.எல். அணி நிர்வாகிகளுக்கு பெரும் அதிர்ச்சியை அளித்திருக்கிறது.

இந்தியக் கிரிக்கெட் சபையின் துணை அமைப்பான இந்தியன் பிரீமியர் லீக் சார்பில் கடந்த வருடம் முதலாவது ருவென்ரி 20 போட்டிகள் கோலாகலமாக இந்தியாவின் பல்வேறு [illegible] நடைபெற்றன. கடந்த வருடம் நடைபெற்ற முதலாவது ருவன்ரி 20 போட்டியின் இறுதிச் சுற்றுக்கு ஷேன் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியும், அணித்தலைவர் தோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும் முன்னேறின.

பரபரப்பாக நடைபெற்ற இந்த இறுதிச் சுற்றில் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான ரோயல்ஸ் அணி, சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை தோற்கடித்து சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

கடந்த வருடம் நடைபெற்ற போட்டியின் மூலம் பி.சி.சி.ஐ.க்கு பல கோடி அளவுக்கு வருமானம் கிடைத்தது. முதல் போட்டியே பிரமாண்ட அளவிற்கு நடந்ததால் இந்த வருடம் நடைபெறவிருக்கும் போட்டிகளை இன்னும் பிரமாண்டமாக நடத்த ஐ.பி.எல். நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

முதலாவது ஐ.பி.எல். ருவன்ரி 20 போட்டியில் இந்திய அணியின் முன்னணி வீரர்கள், முதல் தர கிரிக்கெட் வீரர்கள் ஆகியோருடன் வெளிநாட்டைச் சேர்ந்த முன்னணி வீரர்களும், இதில் அவுஸ்திரேலிய வீரர்கள், பாகிஸ்தான் வீரர்கள், இலங்கை வீரர்கள், நியூஸிலாந்து வீரர்கள், ஆகிய வெளிநாட்டு அணிகளைச் சேர்ந்த வீரர்கள் கலந்துகொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# அடுத்த மாதம் வரை ஷரபோவா இல்லை

புளோரிடா, பெப்.9

பிரபல ரஷ்ய டென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா தோள்பட்டைக் காயத்தால் அவதிப்பட்டு வருகிறார். இதனால் அவர் கடந்த ஒகஸ்ட் மாதத்திற்கு பிறகு எந்த ஒரு சர்வதேச போட்டியிலும் பங்கேற்கவில்லை.

அமெரிக்க ஓபன், ஒலிம்பிக், அவுஸ்திரேலிய ஓபன் ஆகிய முக்கிய போட்டிகளில் கூட விளையாட முடியாமல்போனது. அடுத்த வாரம் பரிஸில் நடக்கவுள்ள போட்டி அதன் பிறகு டுபாய் டென்னிஸ் ஆகியவற்றில் கலந்துகொள்ள முதலில் முடிவுசெய்து இருந்தார். ஆனால் தோள்பட்டைப் பிரச்சினை இன்னும் முழுமையாக குணமாகாததால் அந்தப் போட்டிகளில் இருந்தும் விலகிவிட்டார். கடந்த சில வாரங்களாக புளோரிடாவில் அவர் கடுமையான பயிற்சி மேற்கொண்டார். அது அவருக்கு நல்ல பலனைத் தந்துள்ளது. மார்ச் மாதம் நடைபெறவுள்ள போட்டிகளில் மீண்டும் களம் திரும்ப அவர் திட்ட[illegible]றார். அந்தப் போட்டிகளுக்கு தன்னை தயார்படுத்திக் கொள்வதே



இலக்கு என்றும் அவர் தெரிவித்துள்ளார். முன்னாள் முதல்தர வீராங்கனையான 21 வயதான ஷரபோவா, நிறைய போட்டிகளில் ஆடாதமையால் தற்போது தரவரிசையில் 17ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார். 2004ஆம் ஆண்டு விம்பிள்டன் பட்டத்தை வென்ற பிறகு அவர் முதல் 10 இடங்களை விட்டு வெளியேறி இருப்பது இதுவே முதல் முறையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்தமிழர்களைக் காப்பாற்றக் கோரி சீர்காழியில், தீக்குளித்து உயிரைத் தியாகம் செய்த காங்கிரஸ் பிரமுகர் ரவிச்சந்திரனின் இறுதி ஊர்வலத்தில் அரசியல் தலைவர்கள் அஞ்சலி செலுத்தும் போது...

# 3 வைத்தியசாலைகள் மீது முல்லைத்தீவில் தாக்குதல்

## செஞ்சிலுவைக் குழு தகவல்

கொழும்பு, பெப். 09

முல்லைத்தீவில் மூன்று மருத்துவ மனைகள் நேரடியான தாக்குதலுக்குள் ளாகியுள்ளன. இதனால் இம்மருத்துவ மனைகள் மூடப்பட்டுவிட்டன என்று செஞ்சிலுவை சர்வதேச குழு தெரிவித் துள்ளது.

செஞ்சிலுவை சர்வதேச குழுவின் கொழும்பு அலுவலக அதிகாரியான சோபி ரொமானென்ஸ் செய்தி இணையத்தள மொன்றிற்கு இதனை குறிப்பிட்டுள்ளார்.

புதுமாத்தளன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள காயமடைந்த 400 பொதுமக்களை பாதுகாப்பாக வெளி யேற்றுவதற்கான அனுமதியை தருமாறு போரிடும் தரப்புகளை அவர் கேட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு மருத்துவமனை தாக் கப்பட்டதை தொடர்ந்து 400 பொதுமக்கள் புதுமாத்தளன் மருத்துவமனைக்கு பெப்ர வரி மூன்றாம் திகதி மாற்றப்பட்டனர். அங்கு அவர்கள் போதிய சுகாதார வசதி, குடிதண்ணீர் வசதி இல்லாத நிலையில் பாடசாலைகளிலும் சமூக நிலையங் களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவர்களில் 5 பேர் ஏற்கனவே மரணித் துள்ளனர். மேலும் பல நோயாளர்களுக்கு அவசர மருத்துவ சிகிச்சை தேவைப்படு கின்றது என்று அவர் குறிப்பிட்டுள்ளர்.

முல்லைத்தீவின் வட - கிழக்குப் பகுதி களில் மூன்று மருத்துவ நிலையங்கள் ஏற் கனவே நேரடி தாக்குதலுக்கு உள்ளானமை யைத் தொடர்ந்து மூடப்பட்டுள்ளன. இவ்வாறான தாக்குதல்கள் மணிதாபிமான சட்டங்களின்கீழ் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை என அவர் மேலும் குறிப்பிட் டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடி யிருப்பு, முல்லைத்தீவு, உடையார்கட்டு ஆகிய இடங்களில் உள்ள அரச வைத் தியசாலைகள் விமான மற்றும் ஷெல் தாக்குதல்களால் சேமடைந்திருந்தன என்பது தெரிந்ததே. (அ-சி)

## நீர்வேலியில் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், பெப்.9

நீர்வேலி வடக்கு நாகபூஷசணி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை மு.ப. 9 மணி தொடக்கம் 10.30 மணி வரை நடைபெறவுள்ளது. (7)

## விபத்தில் பெண் காயம்

யாழ்ப்பாணம், பெப்.9

மோட்டார் சைக்கிள் - மினிபஸ் விபத் தில் யுவதி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.நகரப் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவத்தில் திருநெல் வேலி முருகன் கோயிலடியைச் சேர்ந்த எஸ்.செந்துஷா (வயது-22) என்ற யுவதியே படுகாயமடைந்துள்ளார். (9-78)

## வன்னி மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுக்கிறேன்'' - என அவர் தெரிவித்துள் ளார்.

1987 இந்திய - இலங்கை உடன்படிக் கையை அமுல்படுத்துமாறும் அவர் இலங்கை அரசைக் கேட்டுக்கொண் டுள்ளார்.

''நாங்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்குவதில்லை, அந்த அமைப் புக்கு அனுதாபமும் இல்லை. அது பயங் கரவாத அமைப்பு'' - என பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார். தமிழ்நாடு அரசியல் வாதிகள், தமிழ் மக்களிலிருந்து விடு தலைப் புலிகளைப் பிரித்துப்பார்க்க வேண்டும் என முகர்ஜி வேண்டுகோள் விடுத் துள்ளார். (சி)

## முல்லைக்கடலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணி தொடக்கம் 6.00 மணி வரை இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.

இதில், கடற்படையினரின் சுப்பர் டோரா கடற்கரும்புலிகளின் தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்டுள்ளதுடன் அதில் இருந்த 15 கடற்படையினரும் கொல்லப்பட்டுள் ளனர்.

தொடர்ந்து, கடற்புலிகள் நடத்திய தாக்குதலில் கடற்படையினரின மற்றொரு சூப்பர் டோரா கடுமையான சேதங்களுக்கு உள்ளாகியுள்ளது.

இம்மோதலில் கடற்புலிகள் நால்வ ரும் கடற்கரும்புலிகள் இருவரும் உயிரி ழந்தனர் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகளின் விமானப் படை, கடற்படை என்பவற்றின் செயற்பாடு களை படையினர் முழு அளவில் சீர் குலைத்துள்ளனர். கடற்பகுதியில் 24 மணிநேரமும் கடற்படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

புதுக்குடியிருப்பில் இரும்புக்கம்பியால் காப்பிடப்பட்ட டிரக் வண்டியில் தாக் குதல் நடத்த வந்த விடுதலைப்புலிகள் மீது படையினர் தாக்குதல் நடத்தினர். படையினரின் பதில் தாக்குதலில் 34 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களின் 11 சடலங் களை படையினர் மீட்டுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் மேலும் கூறினார்.

172 சதுர கிலோமீற்றர் பிரதேசத் துக்குள் விடுதலைப்புலிகள் முடக்கப்பட் டுள்ளனர். சுமார் 700 உறுப்பினர்கள் வரை யிலேயே தற்போது அங்கு முடங்கியுள்ளனர் - படையினர் எல்லாத் திசைகளில் இருந்தும் தாக்குதல் நடத்துவதால் விடு தலைப்புலிகள் தாக்குதல் திறனை இழந்து விட்டனர் - என்று இராணுவப் பேச்சாளர் விவரித்தார். (அ-1-7)

## டோரா தாக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொந்தமான டோராப் படகொன்று மூழ் கடிக்கப்பட்டதுடன் மேலுமொன்று சேத மாக்கப்பட்டதில் கடற்படையினர் 15 பேர் கொல்லப்பட்டனர் என வெளியிடப் பட்ட இணையத்தளச் செய்தியானது ஜோடிக்கப் பட்ட ஒரு தகவலாகும் எனவும் அவர் கூறினார்.

இச்சம்பவம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

நேற்று அதிகாலை 5.30 மணிமுதல் 6 மணிவரையான காலப்பகுதியில் முல்லைத் தீவிலிருந்து சுமார் 52 கிலோமீற்றர் தொலை விலான கடற்பரப்பில் கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் கடும் மோதல் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த மோதல் சம்பவத்தில் கடற்புலி உறுப்பினர்களில் நால்வரும் கடற்கரும் புலிகளில் இருவரும் கொல்லப்பட்டுள் ளனர். மேலும் சிலர் காயமடைந்துள்ளனர். அத்துடன் இதன் போது கடற்புலிகள் நடத் திய தாக்குதலில் கடற்படைக்குச் சொந்த மாக சூப்பர் டோரப் படகொன்று மூழ் கடிக்கப்பட்டுள்ளதுடன் மேலுமொன்று பகுதியளவில் சேதமாக்கப்பட்டுள்ளது என்று இணையத்தளங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

இவ்வாறான செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை. பலவீனமடைந் துள்ள புலிகள் இவ்வாறான பொய்யான செய்திகளின் மூலம் அனைவரது கவ னத்தையும் திசை திருப்ப முயற்சிக்கின்ற னர் என்றும் கடற் படையின் பேச்சாளர் மேலும் கூறினார்.

## முல்லைத்தீவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது, விமானப்படையின் விமானங்கள் வட்டமிட்டன எனவும் அப்போதே பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது எனவும் கூறப் பட்டது.

சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள், பச்சிளம் குழந்தைகள் என பெரும் எண் ணிக்கையான மக்கள் உடல் சிதறிக் கொல் லப்பட, மேலும் பெருமள விலானோர் படுகாயமடைந்து வீழ்ந்த பெரும் அவலம் அங்கு நிலவியது.

கொல்லப்பட்டவர்களின் உடல்களையோ, அல்லது காயமடைந்து வீழ்ந்தோரையோ மீட்டு எடுக்க முடியாத அளவுக்கு தொடர்ந்து கடுமையான பீரங்கி தாக்குதல் கள் நடந்தவண்ணம் இருந்தன. இதனால் காயமடைந்தோரை மீட்க முற்பட்டவர் களும் காயங்களுக்கு உள்ளாகி வீழ்ந்தனர் எனவும் கூறப்படுகிறது.

இதேபோன்று பிற்பகல் 3 மணியளவில் ஷெல் தாக்குதல் ஓய்ந்த பின்பு காய மடைந்த வர்கள் மீட்கப்பட்ட போது - காய மடைந்த பலர் இறந்து போயிருந்தனர். இறந்தவர்கள் போக, காயமடைந்த நிலை யில் இருந்த 198 பேர் மீட்கப்பட்டனர்.

காயமடைந்தோர் பலர் மீட்கப்பட்ட போதும் - தற்போது வைத்தியசாலைகள் எது வும் வன்னியில் இல்லாத நிலையில் - மரங்க ளின் கீழும், கொட்டகைகளின் கீழும், வெறும் பாய்களின் மீது வைத்தே அவர்களுக்கு மருத் துவ சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

ஞாயிறன்று நடைபெற்ற தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழர் களின் எண்ணிக்கை 72 என முதற்கட்ட தகவல்களில் உறுதி செய்யப்பட்டுள் ளது. இருந்தாலும் மீட்புப்பணிகள் முழு மையாக நடைபெ றாத நிலையில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகின்றது- என்று தெரிவிக்கப் பட்டுள்ளத. (அ-சி)


**Seminar-2**
Mon. 8 - 1
சிங்களம்: பேராசிரியர் எஸ்.ஸ்ரீகுலேஸ்வரன்
பேச, எழுத, வாசிக்க அடிப்படையில் இருந்து கைவேடு இலவசம்
Only 150/=
English V.S.Soory S.L.T.S
G.A.Q. & Officers
11 - 1 Exam View
**Arts Academy**
நாவலர் வீதி AOA

**WANTED - Immediately**
**SECURITY CONSULTANT**
◀Should work on a permanent basis
◀Ex-officers of forces/police with security oriented experience preferred
◀Attarctive salary and other benefits
◀Age immaterial
Call over today between 3 p.m. - 4.30 p.m.
AT
**361, Kasthuriar Road,**
**Jaffna.**

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**
சகல விதமான மோட்டார் சைக்கிள் வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் அனைத்தும் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் மீள் திருத்திக்கொடுக்கப்படும்.
உ+ம் MD 90 செட்டை, Lancer செட்டை, China பிளாஸ்ரிக், Indian பிளாஸ்ரிக்.
இல.6, கனகசபை லேன், கே.கே.எஸ். றோட், சிவலிங்கப்புளியடி, வண்ணார்பண்ணை.
தொ.பே.: 021 222 8680

SUBRA(14) SUBRA(14)
**GEOGRAPHY A/L DAY**
Mon., Fri. - 6.30 - 8 மணி
Mon.அலகு ரீதியான பரீட்சை.
Tue.செய்முறை புவியியல்
Wed.சுற்றாடல் புவியியல்
Thu.மானிடப் புவியியல்
Fri.- Pass Paper Class
ஆரம்பம் - 10.02.2009 6.30 மணி
A/L Day கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப் பிரிவுகள் வார நாள்களில் காலை 6.30 - 11.30 வரை
எமது வழமையான ஆசிரிய குழுவின் போதனைகள்.

**இந்து நாகரிகம்**
**A/L DAY CLASS**
ஆரம்பம் 10.02.2009
Tue. 11 a.m.
Tue., Thur.,Fri.
(வகுப்புகள் நடைபெறும்)
தனிப்பாட அனுமதி உண்டு.
S.ஜெயக்குமார் B.A.(Hons)
NEC
Clock Tower Road, Jaffna




ஓம் விராட் விஸ்வப் பிரமணே நமஹ
சங்கானையில் புதியதோர் உதயம்
மங்களகரமான நகைமாளிகைத் திறப்பு விழா
**ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்**
**ASAIPILLAI & SON NAGAI MADAM**
அன்புடையீர்,
நிகழும் சர்வதாரி வருடம் தைமாதம் 27 ஆம் நாள் (09.02.2009) திங்கட்கிழமை காலை 11.30 மணி முதல் 12.30 மணிவரையில் வரும் கர்க்கடக லக்கின சுப்முகூர்த்த வேளையில் இந்த நகைமாளிகை கோலாகலமாகத் திறந்து வைக்கப்படுகின்றதென்பதை அன்பர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.
வருக! வருக!! தங்கள் வரவு நல்வரவாகுக!!!
உரிமையாளர்: ஆ.குணசேகரம்
இல. 10, பஸ்நிலையம், சங்கானை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.